


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 7 இதழ் - 5, செப்டம்பர் - அக்டோபர் 2021



**R5239**

## LEGAL AND ACTUAL CANCELLATION OF SIN
## பாவம் சட்டப்படியும் உண்மையாயும் நீக்கப்படுதல்

ஆதாமுக்கு தீர்ப்பு கூறப்பட்டபோது அவனது இனம் முழுவதும் அவனுக்குள் இருந்ததால்,அவனோடு கூட மனுக்குலம் தண்டனைக்குள்ளானது. ஆறாயிரம் வருட காலமாக பலவீனத்தினாலும், குறைகளினாலும், பாவத்தினாலும் மனுக்குலத்தினால் இந்த தெய்வீக தண்டனையிலிருந்து தன்னை விடுவித்துத் கொள்ள முடியவில்லை. ஒருவரின் கீழ்ப்படியாமையினாலே அனைவரும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே எல்லாருக்கும் ஜீவனை அளிக்கும் ஏதுவான தீர்ப்பு உண்டாவதற்காக, ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே மனுக்குலத்தின் மேல் வந்த மரண தண்டனையை நீக்கும் நோக்கத்திற்காக தேவன் இரட்சகரைக் கொடுத்திருக்கிறார். -ரோமர் 5 : 18,19

பதினெட்டு (தற்போது பத்தொன்பது) நூற்றாண்டுகளுக்கு முன்பு நமது கர்த்தர் மனிதனுடைய ஜீவனுக்காக மீட்கும் பொருளை கொடுத்தார். இடைப்பட்ட காலத்தில் மனுக்குலத்திலிருந்து சபையை அழைத்து அவரது பலியின் மரணத்தில் அவருடன் பங்குதாரராக ஆகவும் அதன்பிறகு அவர்கள் அவரது மகிமையில் பங்கு பெறவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடைசி அங்கம் திரைக்கு பின்னால் செல்லும் போது, தலையாகிய இயேசுவும் அவரது சரீரமாகிய சபையும் இணைந்த மாபெரும் பிரதான ஆசாரியர் முழுமையடைந்து, பிறகு கிறிஸ்து, தமது பலியின் புண்ணியத்தை உலகத்தின் பாவங்களுக்காக சமர்ப்பிப்பார். இதை ஏற்றுக்கொள்வதின் மூலம் தற்போது சபையின் பாவங்கள் நீக்கப்படுவது போல உலகின் பாவங்கள் சட்டப்பிரகாரமாக நீக்கப்படும். நாம் கர்த்தருடன் தெய்வீக நியாயமான உறவுக்குள் வரும்போது, இப்படியாக கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. (ரோமர் 8:1)

சுவிசேஷ யுகத்தின் முடிவில், மீட்கும் பொருள் உலகிற்காக உபயோகிக்கப்படும் போது மற்றும் பிதாவானவரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது முழு உலகமும் இயேசு கிறிஸ்துவின் கைகளில் ஒப்படைக்கப்படும். பிறகு மத்தியஸ்தராகிய கிறிஸ்து மூலமாக புதிய உடன்படிக்கை செயல்பாட்டுக்கு வரும் அதன் விதிமுறைகளும் நிபந்தனைகளும் மனுக்குலம் அனைத்திற்கும் திறந்திருக்கும். ஏனெனில் அது அனைவரின் ஆசீர்வாதங்களையும் கொண்டிருக்கும்.

எனினும், இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பெறுவதற்கு மனிதர்கள் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் உண்டு. ஒரு உடன்படிக்கையை தம் பங்குக்கு தேவன் செய்தாலும், கிறிஸ்துவின் ஆளுகையின் ஆயிரம் வருடத்திலும் மனுக்குலம் அதன் பங்குக்கு அதன் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு அதன் தேவைகளின் மூலம் தேவனுடைய இணக்கத்திற்கு வர வேண்டும். மனுக்குலத்தில் விருப்பம் உள்ள அனைவரும் படிப்படியாக நித்திய ஜீவனின் தரநிலைக்கு வருவார்கள். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

இந்த கருத்தின்படி உண்மையான பாவ நிவாரண நாளின் வேலையை நிறைவேற்ற, சகல மனுக்குலத்தை -யும் தேவனுடன் ஒப்புரவாக்குவதற்கு, கிறிஸ்துவின் ஆளுகையின் முழு ஆயிர வருடமும் தேவைப்படும். பாவ நிவாரண வேலை நீதியின் திருப்தியை, ஆயிர வருட யுகத்தில் ஆரம்பத்தில் மாத்திரமல்ல, ஆயிர வருட யுகம் முழுவதும் உள்ளடக்கி இருக்கிறது. இது நியாயப்பிரமாண தொடக்கத்தின் நிழலில் காண்பிக்கப்படுகிறது. மோசே முதலில் இரத்தத்தை நியாயப்பிரமாண கற்பலகைகளில் தெளிக்கிறார். அதன் பிறகு ஜனங்களின் மேல் தெளிக்கிறார். ஜனங்கள் மேல் இரத்தம் தெளித்தலை நிறைவேற்ற சந்தேகத்திற்கிடமில்லாமல் அதிக நேரம் பிடிக்கும். அதே போல மனுக்குலத்தின் மேல் மெய்யான தெளிப்பித்தலுக்கு பல வருடங்கள் தேவைப்படும்.

### பாவத்திற்கு வருகிற ஒரு தீர்வு

மனுக்குலமானது கல்லறையிலிருந்து வரும் போது, ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலையாகியிருப்பார்களா? என்ற கேள்விக்கான பதில் பெரும்பாலும் கண்ணோட்டத்தை சார்ந்திருக்கிறது. அவர்கள் தெய்வீக ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுபட்டவர்களாக வருவார்கள். ஏனெனில் அவர்கள் அனைவரும் பரம்பரையாக வந்த ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து, ஆதாமுக்காகவும் அவரது இனத்திற்காகவும் கிறிஸ்து கொடுத்த மீட்கும் பொருளின் விலைக்கிரயம் மூலம் விடுவிக்கப்பட்டிருப்பார்கள். பரம்பரையாக வந்த பாவமில்லாத மற்ற பாவங்களுக்கு சுவிசேஷ யுக முடிவில் ஒரு தீர்வு இருக்கும். ஆபேலின் காலம் முதல் தற்காலம் வரை நீதிமான்களின் இரத்தம் சிந்தப்படுவது தேவனுக்கு தேவை என்பதை தற்கால தலைமுறையைக் குறித்து வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆகையால் தெரிந்து செய்கிற பாவங்களுக்கு மகா ஆபத்தின் நாளில் தீர்ப்பளிக்கப்படும். இப்படிப்பட்ட ஆபத்தின் நாள் யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டானதில்லை. (தானியேல் 12:1; மத்தேயு 24:21)

இந்த ஆபத்தின் ஒரு நிழல் யூத யுக முடிவில் யூதர்கள் மேல் வந்ததாக காணப்படுகிறது. (மத்தேயு 23:34-36) இழைக்கப்பட்ட அநீதிக்கு வரக்கூடிய தண்டனை பற்றிய ஒரு விளக்கத்தை நாம் வெளிப்படுத்தலில் காண்கிறோம். நாம் வாசிக்கிறதாவது: "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள

ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவர்கள் தங்களைப் போல கொலை செய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும், தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னும் கொஞ்ச காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது.'' (வெளிப்படுத்தல் 6: 10,11) அந்த பழி வாங்கும் நாள் கிறிஸ்தவ நாடுகளின் கதவருகே இருக்கிறது.

கணக்கு பேரோடு முழுவதும் நீதியாய் நிரப்பப்படும் வரை தெய்வீக நீதியானது தனது கணக்கு சரி பண்ணுதலை முழுமையாக முடிக்க விரும்பாது என்பது இவை எல்லாவற்றிலுமிருந்து தெளிவாகிறது. அந்த காலத்திலிருந்து ஒவ்வொருவனும் அவனுடைய பலவீனத்திற்கும் களங்கங்களுக்கும் அவனே பொறுப்பாவான். (எரேமியா 31: 29,30)

### திறமைக்கு தக்கதாக பொறுப்பு

ஒரு பூரண நிலையின் மீறுதலுக்கு மனுக்குலம் பொறுப்பாகாது. ஆனால் ஒவ்வொருவனுடைய திறமை மற்றும் அறிவுக்கு தக்கதாக பொறுப்பாவார்கள். ஆயிர வருட யுகத்தில் ஒழுங்கானது இப்பொழுது ஒழுங்குப்படுத்தப்பட்ட குடும்பத்தில் உள்ளது போன்று இருக்கும். பலமுள்ள குழந்தைக்கு சுமப்பதற்கு பளுவான சுமை கொடுக்கப்படும். இதே போல வரக்கூடிய யுகத்தில் இருக்கும். ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கக்கூடியதற்கு பொறுப்பாவார்கள். பூரணத்திற்கும் அதை அடைய முடியாததற்கும் பொறுப்பாகமாட்டார்கள். ஆனால் அவனது திறமைக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படுவான்.

ஆயிர வருட யுகத்தில், ராஜ்யத்தின் ஒழுங்கு முறைகளுக்கு இணங்குவதற்கான முயற்சியில் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் முன்னேற்றத்தை கொண்டு வருவார்கள். ஆனால் அவர் அதை செய்வதற்கு முன்னதாக, புதிய உடன்படிக்கைக்குள் நுழைந்து, மகா ராஜா மற்றும் அவரது உதவிக்காரர்களின் தேவைக்கு வருவதை அவர் நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். இதைச் செய்ய அவர் தவறினால், அவர் சட்ட விரோதியாக கருதப்பட்டு, நூறு வயதில் ஒரு பாவியாக அழிக்கப்படுவார். (ஏசாயா 65:20) அவனிடமிருந்து பலவீனங்கள் பாவமாக கருதப்படாது. பலவீனங்களைத் தவிர அனைத்தும் பாவமாக இருக்கும். தன்னால் முடிந்ததற்கு மேலான எதற்கும் அவன் பொறுப்பானவனாக இருக்க மாட்டான். அல்லது அவனால் செய்ய முடியாததற்கு தண்டிக்கப்பட மாட்டான்.

ஆயிரம் வருட ராஜ்யத்தில் மனுக்குலம் இந்த யுகத்தில் சபையைப் போல தனித்தனியாக கையாளப்பட மாட்டார்கள. ஆனால் யூத தேசத்தைப் போல் மொத்தமாக கையாளப்படுவார்கள். தேவனுடனான தனிப்பட்ட உறவு, ஆயிர வருட முடிவு வரை இயலாததாக இருக்கும். அதாவது மேசியா சகல பலவீனங்களையும் நீக்கி, மனுக்குலத்தை பாவம் மற்றும் மரண நிலைமையிலிருந்து உயர்த்தி, பூரண மனித நிலைமைக்கு கொண்டு வரும்வரை இயலாததாக இருக்கும். பிறகு அவர் ராஜ்யத்தை பிதாவானவரிடம் ஒப்படைப்பார். பிறகு அவர் தேவநீதிக்கும் மனுக்குலத்திற்கும் இடையே நிற்க மாட்டார். (1 கொரிந்தியர் 15: 24)

எனினும் பரலோக பிதாவானவர் மறுசீரமைக்கப்பட்ட மனுக்குலத்தை பெறுவதற்கு முன்னர், சில வஞ்சிக்கும் அதிசயத்தக்க செல்வாக்கை உலகத்தில் அனுமதித்து அதன் மூலம் ஒரு முக்கியமான சோதனையை அவர்களுக்கு கொடுப்பார். இந்த செல்வாக்கு ''பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்திடமிருந்து'' வரும். அந்த காலத்திற்குள் ஒவ்வொருவரும் தீமையிலிருந்து நன்மையை அறிந்திருப்பார்கள். ஆகையால் சோதனை என்பது நன்மையை அறிந்தவர்கள் தீமையை நடப்பிப்பார்களா என்பதை கண்டுபிடிக்கவேயாகும். இதன் பலனாக தகப்பனாகிய ஆதாம் மற்றும் தாயாகிய ஏவாள் செய்தது போல அவர்கள் கர்த்தரிடம் உண்மையாக இருக்கிறவர்களா இல்லையா என்பதை அவர் நிரூபிப்பார். (வெளிப்படுத்துதல் 20: 7-10)

கீழ்ப்படிதலுக்கான எந்த சோதனையிலும் தோல்வி அடைபவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக தீர்க்கப்பட்டு, அழிக்கப்படுவார்கள். தங்களை நித்திய ஜீவனுக்கு பாத்திரராக நிரூபிப்பவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள். அந்த காலத்தைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: ''சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தை பெற்றுக் கொள்ளும்.'' (ரோமர் 8:20) ஏகமாய் தவிக்கிற மனுக்குலத்தின் சகல அங்கங்களில் கீழ்ப்படிதலுள்ளவர்கள் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக இருந்தது போல, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய முழு சுதந்தரத்திற்குள் செல்வார்கள். ஆதாம் குறைவுப்பட்டிருந்த அறிவை அவர்கள் பெற்று, ஆதாம் ஜெயங்கொள்ள தவறியதில் அவர்கள் ஜெயம் பெறுவார்கள்.

**R5240**

## All things work for Good to Them
## சகலமும் அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது

ஆதியாகமம் 46: 28-34; 47:12, 28-31

''தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.'' - ரோமர் 8:28

ஆகையால், யாக்கோபும் அவரது அனைத்து குடும்பமும், யோசேப்பின் மூலம் பார்வோன் கொடுத்த அழைப்பின் பேரில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பாலஸ்தீனா தேசத்தை, கானான் தேசத்தை விட்டு, எகிப்தின் கோசோன் நாட்டிற்கு சென்றார்கள். அவர்கள் மேய்ப்பராயிருந்தபடியால் அது அவர்களுக்கு ஏற்றதாக இருந்தது. யோசேப்பு தனது இரதத்தில் ஏறி கோசேனுக்குச் சென்று, பல வருடங்களாக பார்க்காதிருந்த தனது தகப்பனை சந்தித்தான். கிழக்கத்திய நாடுகளின் வழக்கப்படி ஒருவரையொருவர் முத்தங்கொடுத்துக்

கொண்டு கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார்கள். பிறகு பார்வோனை சந்திக்க யாக்கோபும் அவரது குடும்பத்தினரும் வந்தார்கள். அவர்கள் தவறு ஏதும் செய்யாதபடிக்கு யோசேப்பு மிகவும் ஜாக்கிரதையாக இருந்தான். அவர்களது தொழில் ஆடு, மாடு மேய்த்தல் என்பதை பார்வோன் தெளிவாக அறியும்படிச் செய்தான். ஏனெனில் எகிப்தியர்களுக்கு மேய்ப்பர்கள் அருவருப்பாயிருந்தார்கள். ஆகையால் எபிரேயரை விட்டு அவர்கள் விலகியிருப்பார்கள். இப்படியாக கோசேன் தேசம் எகிப்திலிருந்து தனியாக இருக்கும் தேசத்தைப் போல ஆனது.

யாக்கோபு அந்த சமயத்தில் நூற்றிமுப்பது வயது உடையவராகவும் பலவீனமாகவும் இருந்தார். அவர் பார்வோனிடத்தில் கொண்டு வரப்பட்டு, யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தார். பார்வோன் மேல் தெய்வீக ஆசீர்வாதத்தை கேட்டு ஜெபித்திருப்பார் என்று நாம் யூகிக்கிறோம். இப்படியாக யாக்கோபின் குடும்பம், தற்போது இஸ்ரயேல் என்ற புதிய பெயரில் எகிப்திய தேசத்தில் உறுதியாக நிர்மாணம் ஆனார்கள். அதன்பிறகு யாக்கோபு பதினேழு வருடங்கள் உயிரோடிருந்தார். அந்த காலத்தில் இஸ்ரயேலர்களாகிய யோசேப்பும் அவனது ஜனங்களும் பார்வோனுக்கும் எகிப்தியர்களுக்கும் நல்லெண்ணம் உடையவர்களாக இருந்தார்கள்.

தேவனுடைய ஜனங்களின் சகல அனுபவங்களையும் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி செய்ய அவர் விருப்பமும் திறமையும் உள்ளவராக இருக்கிறார் என்பதே இன்றைய பாடத்தின் சிறப்பாக இருக்கிறது. யாக்கோபின் வாழ்க்கை அனுபவங்கள் எந்த வகையில் அவரது நன்மைக்கு ஏதுவாக இருந்தன என்று நாம் கேட்க நமக்கு தோன்றுவது இயற்கையானதாகும். வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: “யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்.” காரியங்கள் யாக்கோபுக்கும் அவரது குடும்பத்திற்கும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி செய்ய தேவனுடைய அன்பு ஏதாவது ஒரு வழியில் வெளிப்படையாக காணும்படி வெளிப்பட வேண்டும். அது எப்படி என்பது தான் கேள்வி. யாக்கோபுக்கும் அவரது குடும்பத்திற்கும் தேவ கிருபை இந்த திசையில் கிரியை செய்தது என்பதை நாம் காணக்கூடுமா?

இயேசு, அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளினால் வழி காட்டப்பட்ட விசுவாசக் கண்களினால் மட்டுமே, தேவனுடைய ஆசீர்வாதங்கள் இஸ்ரயேலருடன் இருந்தது என்பதையும், அவர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களை கொடுத்தார் என்பதையும் நாம் காணக்கூடும். இந்த விசுவாசக் கண்ணை அநேகர் பெற்றிருக்கவில்லை. இஸ்ரயேலருக்கு என்ன ஆசீர்வாதம் வந்தது என்பதை பெரும்பாலான கிறிஸ்தவ ஊழியர்களும் மற்றும் யூதர்களும் காணத்தவறுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள், விகிதாச்சாரப்படி விசுவாசத்தில் பலவீனமாக இருக்கிறார்கள். அவர்கள் உயர்ந்த விமர்சகர்களாலும் பரிணாமக் கொள்கைக்காரர்களாலும், வேதாகமத்திலும் தற்போது ஆரம்பித்திருக்கிற தெய்வீக திட்டத்திலும் முழுமையான அவிசுவாசத்திற்கு திரும்பிவிட முற்றிலும் தயாராக இருக்கிறார்கள்.

ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட மகா வாக்குத்தத்தத்தின் ( உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் ) சந்ததியாகிய யாக்கோபு நேரடியாக துன்பத்திற்குள் சென்றதாக காணப்படுகிறது. அவர் எல்லாவற்றையும் தனது சகோதரனிடம் விட்டுவிட்டு, வீட்டை விட்டு ஓடினார். அவரது மாமன் லாபானிடம் ராகேலை மனைவியாக அடையும்படி ஏழு வருடம் வேலை செய்தார். ஆனால் தேவ சித்தம் அவரை ஏமாற்றும்படி அனுமதித்து இன்னும் ஏழு வருடம் வேலை செய்யும்படி செய்தது. மறுபடியும் அவரது மாமன் லாபான் தனக்கு அதிக லாபம் வரும்படி யாக்கோபின் சம்பளத்தை மாற்றினார். இப்படியாக தனது பங்கை பாதுகாக்கும் முயற்சியில் இறங்கும்படியாக்கோபு செய்யப்பட்டார்.

முடிவாக யாக்கோபு பல வருடங்கள் உழைத்ததின் பலனாக பெற்ற பலன்களுடன் கானானுக்கு தனது சகோதரன் ஏசாவுக்கு ஏராளமான பரிசுகளுடன் திரும்பினான். பிறகு தனது மனைவியையும் தனது பிரியமான மகன் யோசேப்பையும் இழந்தான். அதன்பிறகு பஞ்சம் வந்தது. யோசேப்பும் திரும்ப கிடைத்தான். இதெல்லாம் நாம் கடந்த காலத்தின் பாடங்களில் பார்த்தோம். அதன்பிறகு எகிப்துக்கு குடியேறினார்கள். பிறகு அது அவர்களுக்கு நாசகாரமாதனதாக இருந்தது. இஸ்ரயேலர்களை எகிப்தியர்கள் அடிமைப்படுத்தினார்கள். கடைசியாக அவர்கள் விடுவிக்கப்பட்டு பாரான் வனாந்தரத்தில் நாற்பது வருட காலம் சோதனை அனுபவங்களில் உட்படுத்தப்பட்டு கானானை அடைந்தார்கள்.

## எப்படி தேவன் இஸ்ரயேலை ஆசீர்வதித்தார்?

பிறகு நாட்டை சுதந்தரித்துக் கொள்வது படிப்படியாக நடந்த காரியமாக இருந்தது. அவர்கள் பல்வேறு சோதனைகளையும் துன்பங்களையும் பெலிஸ்தியர், சீரியர்களிடத்தில் சிறைப்பட்டு போகுதல் முதலானவைகளை பெற்றார்கள். பிறகு ராஜாக்களையும் கலகத்தையும் அல்லது ராஜ்யம் பிரிக்கப்படுதலையும் பிறகு பாபிலோனுக்கு சிறைப்பட்டு போகும்வரை அநேக போர்களையும், பஞ்சங்களையும், கொள்ளை நோய்களையும் பெற்றார்கள். சிறைப்பட்டு போனவர்கள் எண்ணற்றவர்களாயிருந்தார்கள். ஆனால் திரும்பி வந்தவர்கள் சிறு கூட்டமாக இருந்தார்கள். அதன்பிறகு அநேக சோதனைகளையும், போர்கள் முதலானவைகளையும் பெற்றார்கள்.

காலப்போக்கில் இயேசு வந்தார். அவர் சிலரைத் தவிரை மற்ற அனைவராலும் நிராகரிக்கப்பட்டார். பிறகு தேசம் தேவனால் நிராகரிக்கப்பட்டது. “உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும்.” படிப்படியாக துன்பங்களும், அராஜகமும் ஒரு தேசமாக கல்லறைக்கு, நித்திரைக்கு செல்லும்வரை அவர்கள் மேல் வந்தன. பதினெட்டு நூற்றாண்டு காலமாக நித்திரையிலிருந்தார்கள். அந்த காலகட்டத்தில் பல நாடுகளில் துன்பங்களை தனிப்பட்ட முறையில் சகித்தார்கள்.

இஸ்ரயேலின் அந்த சகல அனுபவங்களிலும், தேவனுடைய ஆசீர்வாதங்கள் எப்படி அடையாளம் காணப்பட்டது என்பதைத்தான் நாம் காண விரும்புகிறோம். மற்ற தேசங்களின் காரியங்களைக் காட்டிலும் இஸ்ரயேலின் நன்மை மற்றும் ஆசீர்வாதங்களுக்காக தேவன் அவர்களது காரியங்களில் ஈடுபட்டு எந்த வழியில் ரத்து செய்தார் என்பதை நாம் அறிய விரும்புகிறோம். இதைப் புரிந்துகொள்ள, நாம் மற்ற நாடுகளையும் ஜனங்களையும் அவர்களது அனுபவங்களையும் ஒரு கண்ணோட்டம் விட்டு அதன்பிறகு அவைகளின் எதிர்காலத்தைக் குறித்தும் பார்க்க வேண்டும்.

எகிப்து எங்கேயிருக்கிறது – பார்வோனின் ராஜ்யம் இன்றைக்கு எங்கே இருக்கிறது? அசீரியா எங்கே

இருக்கிறது– அதன் ஜனங்கள் இன்றைக்கு எங்கே இருக்கிறார்கள்? பெலிஸ்தியர்கள் எங்கே? இஸ்ரயேலின் காலத்தில் செழுமையிலிருந்த ஏதாவது அல்லது சகல தேசங்களும் எங்கே? பதில் அவர்கள் இல்லை என்பது தான். அவர்கள் மற்ற ஜனங்களுடன் கலந்துவிட்டார்கள் அல்லது இயற்கையான செயல்பாடுகளினால் ஒழிக்கப்பட்டார்கள். அவர்கள் இன்றைக்கு புதுப்பிக்கப்பட முடியாது. ஏனெனில் அந்த ஜனங்களில் யாரும் எங்கேயும் இல்லை. நாம் இந்தியாவின் ஏகப்பட்ட இனத்தார்களைப் பற்றியோ, சீனா, ஜாப்பான் போன்ற நாடுகளின் ஒன்றிணைக்கப்பட்ட ஜனங்களைப் பற்றியோ அல்லது நாகரீகம்இல்லாத ஆப்பிரிக்கா இனத்தவர்களைப் பற்றியோ நாம் விவாதிக்கவில்லை. இவர்கள் எல்லாம் நமது சரித்திர வம்ச பரம்பரைக்கு வெளியே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் மாம்சீக அல்லது ஆவிக்குரிய இஸ்ரயேல் தேசத்தோடு நெருக்கமாக அடையாளம் காணப்படவில்லை.

இஸ்ரயேல் தேசமானது, கல்லறையில், பாதாளத்தில் (ஆதேஷ்,ஷியோல்) தேசமாக ஒரு விழித்தெழுதலுக்கும் உயிர்த்தெழுதலுக்கும் காத்திருந்தாலும், இப்பொழுது இஸ்ரயேல் தேசம் இருக்கிறது. "உலர்ந்த எலும்புகள்" நம்பிக்கையின்மையிலிருந்து முன்னரே எழுப்புதலைப் பெற்று, எதிர்கால ஆசீர்வாதத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டுகிறது. இஸ்ரயேலின் மேல் தேவனுடைய தெய்வீக கவனிப்பால், இஸ்ரயேல் ஒரு ஜனமாக நிலைத்திருக்கும்படி பராமரிக்கப்பட்டார்கள். எதிர்கால ஆசீர்வாதத்தின் இந்த நம்பிக்கை தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தின் அடிப்படையிலானதாகும். இந்த வாக்குத்தத்தம் அவர்களை தொடர்ந்து உயிரூட்டியது. இந்த நம்பிக்கை தான் தீர்க்கதரிசனத்தின்படி காலப்போக்கில் இஸ்ரயேலுக்கு புத்துயிர் கொடுத்து, உலகத்தை ஆசீர்வதிக்கப்போகிற மகா மேசியாவின் ராஜ்யத்தில் மறுபடியும் அதை முன்னேற்றத்திற்கும் அடையாளம் காணும்படியும் கொண்டுவரும்.

தேசிய ஆசீர்வாதத்தைக் குறித்து சொல்ல வேண்டாம். ஏனெனில் ஒரு மானிட சகோதரத்துவத்தின் கருத்தில் அகில உலகத்தைக் குறித்து நாம் நினைக்க வேண்டும் என்று யாராவது ஒருவர் சொல்லலாம். இஸ்ரயேல் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், தனிப்பட்ட ஆசீர்வாதமும் இருக்க வேண்டும். ஒரு தேசமாக நீடித்திருக்கிற கிருபை மாத்திரமல்ல, ஒரு ஜனமாக அவர்களது வாழ்க்கையிலும் இருக்க வேண்டும்.

மிகவும் உண்மை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். தனிப்பட்ட மற்றும் தேசிய (ஜாதியான) ஆசீர்வாதங்கள் கடந்த காலத்திலும் எதிர்காலத்திலும் இருக்கின்றன. கடந்த காலத்தில் இஸ்ரயேலுடனான தேவனுடைய தொடர்புகள், அந்த தேசம் புனிதனமானதாக, பரிசுத்தமானதாக, தெய்வீக திட்டத்தில் உயர்ந்த கனத்திற்கோ, ஸ்தானத்திற்கோ தகுதியானதாக உண்மையில் நிரூபிக்கவில்லை. ஆனால் இந்த தேவ கிருபைகள் அந்த தேசத்தில், ஆபிரகாம் பெற்றிருந்த விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் போன்ற அதே குணலட்சணங்கள் உடைய ஒரு விசேஷித்த ஜனங்களை தெரிந்து கொள்ள கிரியை செய்தது. ஆபிரகாமை தொடர்ந்து ஈசாக்கு வந்தார்; ஈசாக்கை தொடர்ந்து யாக்கோபு வந்தார்; யாக்கோபை தொடர்ந்து இஸ்ரயேல் தேசம் வந்தது. அவர்களிலிருந்து அந்தந்த காலத்திலிருந்து, முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்ற தரமுடையவர்கள் சிலர் இருந்தார்கள்.

தேச வாழ்க்கையில் நூற்றாண்டுகளான சோதனை அனுபவங்கள், உயர்ந்த குணங்கள், விசுவாசத்தில் வலிமை மற்றும் மையம் வரையிலான உண்மைத் தன்மை ஆகியவற்றில் அபிவிருத்தி அடைவதற்கு ஏதுவாக இருந்தன. பரிசுத்த பவுல் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு தவிர இவர்களில் சிலரை எண்ணிக்கையிடுகிறார். அவர் அவர்களோடு கூட "உத்தம இஸ்ரயேலரையும்" உள்ளடக்குகிறார். அவர்கள் நீதியினிமித்தமும், ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மூலம் பெற்ற நம்பிக்கையினிமித்தமும் துன்பங்களை அனுபவிக்கிற அளவுக்கு தேவனிடம் விசுவாசமாக இருந்தவர்கள். அவர் கூறுகிறதாவது: "அவர்களில் சிலர் கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள்... உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை."

இந்த தெரிந்துகொள்ளும் செயல்முறை இயேசுவின் காலத்திலிருந்து தொடர்ந்தது. அதில் அதிகமான பேர் இல்லாதிருந்தாலும் ஒரு மகிமையான கூட்டம் கண்டறியப்பட்டது. இப்படிப்பட்டவர்களை தேவன் தேடிக்கொண்டிருந்து, அவர் தேடினவர்களை கண்டறிந்தார். உண்மை தான், இன்னும் அவர்கள் தங்களது வெகுமதியை பெறவில்லை. உண்மைதான், அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி அவர்களது வெகுமதி பரலோகத்திற்குரியதல்ல, பூமிக்குரியதாகும். "நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்."

இஸ்ரயேலின் இந்த விசுவாசிகளுக்குத்தான் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. ஏனெனில் அவர்கள் தேவனை நேசித்தார்கள். தேவன் அவர்களுக்கு முன்பாக வைத்திருந்த நீதியையும், அவர்களுக்கு தேவன் கொடுத்திருந்த மகா வாக்குத்தத்தங்களையும் மதித்தார்கள். இவர்கள் இந்த மனுக்குலத்தின் உலகத்தை ஆளுகை செய்து, ஆசீர்வதிக்கக்கூடிய மேசியாவின் பூமிக்குரிய பிரதிநிதிகளாக ஆகக்கூடிய நேரம் சமீபித்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

அவர்களைப் பற்றி முன்னர் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறும். அவர்கள் பிதாக்களாக இருப்பதற்கு பதிலாக, மேசியாவின் பிள்ளைகளாக இருந்து, பிதாவைப் போன்ற அவரிடமிருந்து நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வார்கள். அவரது பரலோக ராஜ்யத்தின் கீழான பிரதிநிதிகளாக இருக்கும்படி அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார். (சங்கீதம் 45:16) இப்படியாக இஸ்ரயேலின் சோதனைகளும் துன்பங்களும் தெய்வீக கிருபையின் கீழ் அந்த விசேஷித்த வகுப்பாரின் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். "இவர்கள் கபடமற்ற உத்தம இஸ்ரயேலர்கள்;" இவர்கள் தேவனை எல்லாவற்றிற்கும் மேலாக நேசித்தார்கள். அவர்களது வெகுமதி சீக்கிரத்தில் இருக்கிறது. அவர்கள் மூலமாக பூமியின் ஒவ்வொரு ஜாதிக்கும் ஆசீர்வாதங்கள் விரிவுபடுத்தப்படும்.

## ஆவிக்குரிய இஸ்ரயேலின் அனுபவங்கள்

ஆவிக்குரிய இஸ்ரயேலரின் ஒரு விசேஷித்த வகுப்பாரை உலகத்திலிருந்து அழைக்கும்படியான தேவனுடைய ஏற்ற காலம் வந்த போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையில், முதலாவது சந்தர்ப்பத்தை யாக்கோபின் பிள்ளைகளுக்கு கொடுத்தார். அந்த சமயத்தில் அவர்களில் "கபடமற்ற உத்தம இஸ்ரயேலராயிருந்த" அநேகர் விசேஷித்த

சந்தர்ப்பங்களையும், கிறிஸ்துவிடமிருந்து போதனைகளையும் பெறுகிற சலுகையை பெற்றார்கள். அந்த உண்மையுள்ள, விசுவாசமுள்ள வகுப்பார் அனைவரும் அவரை மேசியாவாக அங்கீகரிக்கவும் விசேஷித்த தெய்வீக வழிகாட்டுதலையும், போதனைகளையும் பெறக்கூடியவர்களானார்கள். மற்றவர்கள் தவறான அபிப்பிராயம், மூட நம்பிக்கை மற்றும் தெளிவற்ற கூற்றுகளினாலும் குருடாக்கப்பட்டிருந்தனர்.

இது ஆபிரகாமின் மாம்சீக வித்துக்கு வந்த அடுத்த அனுகூலமாக இருந்தது. அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கங்களாகக் கூடிய முதல் சந்தர்ப்பத்தை அவர்கள் பெற்றார்கள். இதைக் குறித்த எந்தவித தகவலும் முன்பு அறிவிக்கப்படவில்லை. அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியா மாம்சீகமானவர் அல்ல, ஆவிக்குரிய மேசியா என்பதையும், அவர் தனிப்பட்டவராக இல்லாமல் ஒரு கலவையான மேசியாவாக இருக்கிறார் என்பதையும் அதாவது அவர் அநேக அங்கங்கள் அடங்கியவர் என்பதையும் அறிந்திருக்கவில்லை.

இப்படியாக ஆபிரகாமின் மாம்சீக பிள்ளைகளுக்கு "அது எவ்விதத்திலும் மிகுதியாக இருக்கிறது. தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே." அந்த தேவனுடைய வாக்கியங்களையும் அந்த தீர்க்கதரிசனங்களையும் பெற்ற அவர்கள் மேசியாவைப் பற்றி அறியவும், அவருடன் இணக்கத்திற்கு வரவும், அவரது சீஷர்கள் ஆகவும் நல்ல சந்தர்ப்பத்தை பெற்றிருந்தார்கள்.

ஆனால் மாம்சீக இஸ்ரயேலரைப் பற்றி சொல்லப்பட்டதைப் போல ஆவிக்குரிய இஸ்ரயேலரைப் பற்றி இன்னும் வலியுறுத்தி சொல்லப்பட வேண்டும். அதாவது அவர்களது சலுகைகள் அவர்களுக்கு விசேஷித்த பாடுகளையும் துன்பங்களையும் கொண்டு வந்தன. இயேசு அலைக்கழிக்கப்பட்டு அவருக்கெதிராக எல்லா வழிகளிலும் தீமையான வார்த்தைகள் பேசப்பட்டு, கடைசியாக ஒரு குற்றவாளியைப் போல சிலுவையிலறையப்பட்டார். ஏனெனில் அவர் தன்னை தேவனுடைய குமாரன் என்றும், முடிவாக தான் ஒரு மகிமையின் ராஜாவாக இருப்பேன் என்றும் கூறினார்.

பிறகு இயேசுவின் விசுவாசமுள்ள சீஷர்கள் கசப்பான அனுபவங்களை பெற்றார்கள். சில சமயங்களில் அவர்கள் உண்மையாகவே சித்தரவதை செய்யப்பட்டார்கள், உண்மையிலேயே துன்புறுத்தப்பட்டார்கள். உயிரோடு தோலுரிக்கப்பட்டார்கள். மற்ற சமயங்களில் கிறிஸ்துவினிமித்தம் அடையாளமான துன்பங்களையும் அடையாளமான உயிரோடு தோலுரித்தலையும், தவறாக எல்லா தீமையான மொழிகளையும் அவர்களுக்கெதிராக பேசப்படுதலையும் பெற்றார்கள். வஞ்சகங்கள், தப்பறையான போதகங்கள், உண்மையானவைகளை நிழலான பாபிலோனுக்கு எடுத்துச் செல்லுதல் ஆகிய இவைகள் எல்லாம் தேவனுடைய பிள்ளைகளின் அனுபவங்களாக இருக்கின்றன. பட்டியலை இது முடிக்கவில்லை. ஏனெனில் பரிசுத்த பவுல் அறிவிக்கிறதாவது: "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." இன்றைக்கு கர்த்தரை சேர்ந்தவர் யாராக இருந்தாலும், அவர் தனது ஆண்டவருக்கு உண்மையாயிருந்தால் அவருக்கு சாத்தான், உலகம் மற்றும் தனது சொந்த மாம்சம் ஆகியவற்றிலிருந்து எதிர்ப்பு வரும் என்கிற நிச்சயத்தைப் பெற்றிருக்கிறார்.

அடுத்து கேள்வி எழுகிறது. இவைகளெல்லாம் எப்படி உலகத்தாரைக் காட்டிலும் நமக்கு நன்மைக்கு ஏதுவாக வேலை செய்கிறது? கிறிஸ்தவர்கள், அவிசுவாசிகளைப் போல, யூதர்களைப் போல, முகமதியர்களைப் போல, புறஜாதியாரைப் போல மரிக்கிறதில்லையா? அவர்களது மரிக்கிற அனுபவங்களில் அதன் சம்பந்தப்பட்ட வியாதி, துக்கம், வலி ஆகியவற்றில் பங்கு பெறுவதில்லையா? இந்த யோசனைகளில் யாரும் நிச்சயமாக விவாதம் பண்ண முடியாது! அப்படியிருக்கும் பட்சத்தில், ஆவிக்குரிய இஸ்ரயேலராக இருப்பதால் ஏதாவது அனுகூலம் இருக்கிறதா என்று நாம் கேட்போம்? அகில உலகமும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்படுமானால், அகில உலகமும், ஆயிர வருட யுக மேசியாவின் மகிமையான ஆளுகையின் கீழ் ஆசீர்வாதத்தை பெறுவார்களானால் மற்றும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள், வானத்தின் கீழெங்கும் அப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ராஜ்யத்தில் முதல் இடத்தை பெறுவார்களானால், ஆண்டவருடைய ஊழியத்தில், சகோதரர்களின் ஊழியத்தில், சத்திய ஊழியத்தில், தேவனுடைய ஊழியத்தில் தங்கள் ஜீவனை கொடுக்க நாடுகிற மற்றும் நல்ல போர் வீரனாக கஷ்டங்களை சகிக்கிற உண்மையும் விசுவாசமுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு என்ன அனுகூலம் இருக்கிறது?

## ஒவ்வொரு வழியிலும் அதிக அனுகூலம் நம்முடையது

இந்த வகுப்பாருக்கு, தற்கால வாழ்க்கையிலும், அதே போல வருங்கால வாழ்க்கையிலும் ஏராளமான அனுகூலங்கள் இருக்கின்றன. தற்கால வாழ்க்கையில் அனைத்து மனித புரிந்துகொள்ளுதலையும் கடந்த தேவ சமாதானம் அவர்களது அனுகூலமாக இருக்கிறது. அவர்கள் தேவனை நேசிப்பதால் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை விசுவாசத்தின் மூலமாக அறிந்துகொள்ளுதல் அவர்களது அனுகூலம். உலகத்தில் உள்ள மற்றவர்களுக்கு எதுவானாலும் நடக்கலாம். ஆனால் அவர்களைப் பொறுத்த வரையில் அப்படி எதுவும் நடக்காது என்று உணர்ந்து கொள்ளுதல் அவர்களது அனுகூலம். அவர்களது காரியங்களும் அக்கறை அனைத்தும் தெய்வீக மேற்பார்வையின் கீழ் இருக்கின்றன. ஒவ்வொரு கொந்தளிப்பிலும் (புயலிலும்) அவர்கள் சமாதானத்தை பெறுவார்கள் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை! மகா ஆபத்திலும் அவர்களால் களிகூரக் கூடும் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை!

அவர்களது சந்தோஷம் ஆவிக்குரியது. பூமிக்குரிய அனுபவம் அதை எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் கிறிஸ்தவ அனுபவங்களில் முதிர்ச்சி அடைவதாலும், அறிவிலும் கிருபையிலும் வளர்வதாலும் அவர்களது சந்தோஷம் தினமும் வருஷந்தோறும் அதிகரிக்கிறது. பரலோக கிருபையின் சிங்காசனத்தை அடைதல் அவர்களது அனுகூலம். பரலோக பிதாவோடும் அவர்களது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடும் ஐக்கியமாக இருப்பது அவர்களுக்கு ஓர் அனுகூலம். பரிசுத்த பேதுரு அறிவிப்பது போல, அவர்கள் தங்களை ராஜரீக ஆசாரிய கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாகவும் அவருக்கு சொந்த ஜனமாகவும் எண்ணிக்கொள்ளலாம். அவர்கள் தேவனுடைய ஸ்தானாதிபதிகளாக இருக்கிறதற்காகவும், மற்றவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதற்காகவும் இப்படியாக "அவர்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான

ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்கான" அனுகூலத்திற்காகவும் அவர்கள் களிகூறலாம். இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் கட்டுப்பாடுகள், ஆபத்துக்கள், எதிர்ப்புகள் ஆகியவற்றிற்கு ஈடாக அவர்கள் பெறுகிற அனுகூலங்கள், தயவுகள் மற்றும் ஆசீர்வாதங்கள் மிகவும் பெரியது!

### வரவிருக்கிற வாழ்க்கையின் சந்தோஷங்கள்

ஆனால் தற்கால வாழ்வின் இந்த சகல அனுபவங்களுக்கு அப்பால், எதிர்காலத்திற்காக தேவனுடைய மகிமையின் வளங்கள் கிடக்கின்றன. இவைகள் விசுவாசத்தின் வல்லமையை பிடித்து வைத்திருக்கின்றன. அவைகள் "இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கின்றன" என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். வருங்காலத்திற்குரிய அந்த வாழ்க்கை ஆச்சரியமான ஒரு வாழ்க்கையாக ஆராய முடியாத ஒன்றாக இருக்கிறது. கீழ்ப்படிதலின் ஒவ்வொரு படியும் தேவனுடனான உரிமைகளையும் சலுகைகளையும் அவர்களுக்கு கொண்டு வருகின்றன. தேவனைப் பற்றிய மற்றும் அவரது மகிமையான திட்டத்தைப் பற்றிய அறிவில் ஒருபடி முன்னேற்றத்தை கொண்டு வருகின்றன. இப்படியாக பரிசுத்தம் மற்றும் சுய பலியின் குணலட்சணம் அதிகமாக இருந்தால், அவர்களது அறிவு ஆழமானதாகவும் அனுபவங்கள் செழுமையானதாகவும், அவர்களது எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் மிகவும் விலையேறப் பெற்றதாக இருக்கும்.

இந்த வகுப்பாரின் எதிர்பார்ப்புகள் என்னென்ன? என்று நாம் கேட்கப்படுகிறோம். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற காரியங்கள் அவர்களது எதிர்பார்ப்புகளாக இருக்கின்றன என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவர்கள் இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதால், அவர்களது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மரித்தோரின் உயிர்த்தெழுதல் முழுமையான ஆவிக்குரிய பூரணத்தில் இருந்து, அவர்களை உயர்ந்த சுபாவத்தில் தேவனுடைய பிள்ளைகளாக ஆக்கும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பு. அவர்கள் பிள்ளைகளானால், "அவர்கள் சுதந்தரும், தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக" இருப்பார்கள். மேலும் இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஒரு ஆவிக்குரிய இராஜ்யமாகிய ஒரு ஆவிக்குரிய கானானின் சுதந்தரர். அவர்களது இராஜ்யத்திற்குள் நுழைவதற்கு மற்றவர்களைக் காட்டிலும் உண்மையான உயிர்த்தெழுதலின் வல்லமையின் அனுபவம் தேவைப்படுகிறது. அப்போஸ்தலர் கூறுவது போல, அவர்கள் "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்." ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது" என்று இது பொருள்படுகிறது. அப்படியானால் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு, அவரது நோக்கத்தின்படி யூத யுகத்தில் மாத்திரமல்ல, சுவிசேஷ யுகத்திலும் அழைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பது மிகவும் முழுமையான பூரணமான அர்த்தத்தில் உண்மையிருக்கிறதல்லவா!!

**R5242**

## Woes Ancient and Modern
## பழங்கால மற்றும் நவீன கால துயரங்கள்

ஆமோஸ் 6:1-8

"நீங்கள் பிழைக்கும்படிக்கு தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்." - ஆமோஸ் 5: 14

ஒவ்வொருவரும் தீமையை அல்ல, நன்மையையே தேடுகிறார்கள் என்று கூறுவது பாதுகாப்பானது. ஒவ்வொருவரும் இன்பத்தை தேடுகிறார்கள். துன்பதையல்ல - சந்தோஷத்தை தேடுகிறார்கள் துயரத்தை அல்ல. நமது தீர்மானங்கள் அனைத்தும் ஏறக்குறைய நெறிதவறியதாக இருப்பதே சங்கடமாக இருக்கிறது. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிக ஞானமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் யாரும் பூரணரில்லை. "நீதிமான் இல்லை, ஒருவனாகிலும் இல்லை." தேவன் அமைத்து வைத்திருக்கிற மகிமையின் தரநிலையில் அனைவரும் குறைவுபடுகிறார்கள். நாம் அனைவரும் பாவத்தில் பிறந்திருப்பதும், சரியாக வடிவமைக்கப் பெறாததுமே கஷ்டமானதாக இருக்கிறது. நமது சரீரங்கள் மாத்திரம் அபூரணமாக இருக்கவில்லை. நமது மூளை சமநிலையற்றதாக இருக்கிறது. சிலர் ஒருவகையிலும், வேறு சிலர் வேறு வகையிலும் சமநிலையற்று இருக்கிறார்கள். இதன் விளைவாக இளைஞரும் கன்னிகைகளும் குழந்தையிலிருந்து வாலிப பருவம் வரை வாழ்க்கையின் பிரச்சனைகளைப் பார்த்து, சந்தோஷம், இன்பம், களிகூருதல் ஆகியவைகளைக் குறித்து பல்றேு எண்ணங்கொண்டிருக்கின்றனர்.மேலும் அவர்களது பாத்திரத்தை நீடிய வாழ்வு, செல்வம், தொல்லையின்மை, கனம் முதலானவைகளால் நிரப்புவதற்கு பல்வேறு தீர்மானங்களையும் எடுக்கிறார்கள்.

நமது பொது பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் ஆசிரியர்களின் மனிதாபிமானம் செல்வாக்கு பெறுகிற ஒரு மிகவும் ஆச்சரியமான சந்தர்ப்பத்தை பெற்றிருக்கிறார்கள். உலக ஆசிரியர்கள் பொதுவாக கிருபையுள்ள இரக்கமுள்ள இலட்சியங்களை பூர்த்தி செய்வதற்காக உன்னதமாக பாடுபடுகிறார்கள் மற்றும் அவர்களது மாணவர்களின் உயர்வுக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் அவர்களது சந்தர்ப்பங்களை பயன்படுத்துகிறார்கள் என்ற எண்ணத்திலும் நாம் களிகூருகிறோம். அவர்களில் அநேகர் தங்களது மாபெரும் சலுகைகளுக்காக சொற்பமான பாராட்டுதலைப் பெறுகிறார்கள். சிலர் நிச்சயமாக உலகத்திலுள்ள மற்றவர்களைப் போல சுயநலம் உள்ளவர்களாகவும் இருந்து தங்களது வேலையை வியாபார நோக்கில் பார்க்கிறார்கள் அதாவது ஊதியத்திற்கேற்ற வேலை.

தற்கால வெகுமதிக்காக பார்க்காமல் எதிர்கால இன்னும் அதிகமான முக்கியமான வெகுமதிக்காக வேலை செய்ய வேண்டுமென்று உலக ஆசிரியர்களை நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். நமது கிரியை மற்றும் வார்த்தையும், ஆம், நமது சிந்தைகளும், நோக்கங்களும் நமது தற்கால அனுபவங்களுக்காக மாத்திரமல்ல,

கல்வாரியில் இரட்சிப்பின் பலியின் மூலமாக எல்லாருக்கும் உறுதியளிக்கப்பட்ட நமது எதிர்கால வாழ்வுக்காகவும் இருக்க வேண்டும் என்பது வேத மாணவர்களின் வளரும் கருத்தாக இருக்கிறது.

பிள்ளைகளுக்கான முதலாவது மற்றும் பிரதானமான பொறுப்பு நிச்சயமாக பெற்றோர்கள் மேலேயே விழுகிறது. பெரும்பாலான பெற்றோர்கள் ஓரளவுக்கு குழந்தைகளுக்கான தங்களது பொறுப்பை தேவனுடைய கண்ணோட்டத்திலும் மனிதர்களின் கண்ணோட்டத்திலும் உணர்ந்து அவர்களை உலகிற்குள் கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களது அறியாமையின் கஷ்டங்களின் கீழ் உழைக்கிறார்கள். வாழ்க்கையில் தாங்களே எடுத்துக்கொள்ளும்படியான சரியான மார்க்கத்தை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கை, அதிகமான, குறைவான தீவிரமான தொடர்ச்சியான தவறுகளாக இருக்கின்றன. தங்கள் பிள்ளைகள் இதே போல தவறு செய்வார்கள் என்றும் அவர்களது வெற்றி பெரும்பாலும் அதிர்ஷ்டத்தை பொருத்தது என்றும் யூகிக்கிறார்கள். வாழ்க்கை அனுபவங்களில் அடிப்படையான கொள்கைகளை காணாமல் அவர்கள் தங்கள் பிள்ளைகளை அறிவுப் பூர்வமாக வழிகாட்ட முடியாதிருக்கிறார்கள். இங்கே ஆசிரியர்கள், நெறியாளர்கள், மதவாதிகள் மற்றும் மனிதாபிகள், தங்களது சந்தர்ப்பங்களை கண்டுபிடிக்கிறார்கள். ஆனால் எந்த வழியிலாவது நிறைவேற்றக்கூடிய ஒருவர் எவ்வளவு சிறியவராக காணப்படுகிறார்! பரோபகாரி எந்த அளவுக்கு அதைரியப்படுத்தப்படுகிறார்!

மொத்தத்தில் ஒரு பரந்த நோக்கில் தற்காலம் ஐம்பது வருடத்திற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் மாறுபட்டதாக இருக்கிறது. எல்லா திசைகளிலும் முன்னேற்றத்தை காண்பிக்கிறது. நமது நகரங்கள் சுத்தமாக இருக்கின்றன – உடல் ரீதியாக மற்றும் ஒழுக்க ரீதியாக – வெளிப்பார்வைக்கு மற்றும் தர நிலையைப் பொருத்த வரை. எனினும் அவ்வப்பேது லஞ்சம் மற்றும் கலகங்களின் வெளிப்படுத்துதல்கள் நமக்கு அதிர்ச்சியையும் அவமானத்தையும் ஏற்படுத்துகின்றன. ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்தவைகளை ஞாபகத்தில் கொண்டு வந்தால் பழங்கால இழிவான குணமுடையவர்கள், ஏழை குடிகாரர்கள் உட்கார்ந்திருத்தல், பொய் கூறுதல், வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் வெவ்வேறு அளவிலான போதை ஆகியவை இருந்ததில்லை. களங்கம் சமூகத்தின் முகத்தில் இருந்ததில்லை. போதை மற்றும் சமூக தீமை போன்றவைகளுக்கு எதிராக போராட்டம் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது. அது பழைய நிலைமைகளை இல்லாததாக ஆக்குகிறது.

சில நாடுகளில் முன்னேற்றம் மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. இழிவான குணமுடையவர்கள் பளபளப்பான அரண்மனைகளில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். மனிதனுடைய மனவுறுதிக்கு அப்பால் ஆவலைத் தூண்டி அவனது விழுகைக்கு காரணமாக இருந்தவர்களால் கூட போதையானது வெறுக்கப்படுகிறது.

### இப்போது புது பிரச்சனைகள் – புது சோதனைகள்

எப்பொழுது இஸ்ரயேல் சரித்திரத்தில் வளமான வகுப்பார் செல்வந்தர்களானார்கள், எப்பொழுது தேசத்தின் பெரும்பாலான ஞானம் மற்றும் புத்திசாலியான ஜனங்கள் தொல்லையில்லாத சுக வாழ்வுக்கு, சுய மனநிறைவுக்கு அமைதியுற்றார்கள் என்பதை நமது பாடம் சொல்லுகிறது. தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் அவர்கள் வெற்றி

நுழைய விசுவாசமும் கீழ்ப்படிதலும் அத்தியாவசியமான தேவைகளாக இருக்கின்றன. அந்த விசுவாசம் இயேசுவை பாவத்தை சுமக்கிற தேவ ஆட்டுக்குட்டியாக அங்கீகரிக்க வேண்டும்; அது அவரை மாதிரியாகவும் முன் மாதிரியானவராகவும் அங்கீகரிக்க வேண்டும். அவரது ஆவியை, அவரது பண்புகளை பெற்றிருந்து தற்கால வாழ்க்கையில் அவரது அடிச்சுவட்டில் நடக்கிறவர்களுக்கே பரிசு கிடைக்கும். இப்படிப்பட்டவர்கள் முடிவில் கனம், மகிமை, சாகாமையை - இராஜ்யத்தை பெற்றுக்கொள்வார்கள்.

தற்காலத்தில் அவர்கள் உலகிற்கு சாதகமற்ற பக்கத்தில் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவானவனிடம் போரிடுபவர்களாக காணப்படுவார்கள். அவர்களுடைய சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணம் பண்ணியதாலும் அதன் மூலம் அவர்கள் பெற்ற கர்த்தரின் ஆவியினாலும் அவர்கள் உண்மையில் அனுபவிக்கிற சந்தோஷத்தையும் ஆசீர்வாதத்தையும் உலகத்தினால் புரிந்துகொள்ளக் கூடாதிருக்கிறது. இவர்கள் மட்டுமே உலகம் கொடுக்கக் கூடாததும், எடுத்துப்போட முடியாததுமான சமாதானத்தையும் சந்தோஷத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் தேடி, கிடைக்காததை தேவனுடைய பரிசுத்தவான்கள் அனுபவிக்கிறார்கள்.

“சமாதானம் அவர்களுடையது, அவர்கள் அளவை அறியவில்லை,

சந்தோஷம் அவர்களுடையது, அவர்கள் எப்பொழுதும் தரித்திருக்கிறார்கள்.”

**R5243**

## The Victories of Faith
## விசுவாசத்தின் வெற்றிகள்

அப்போஸ்தலர் 7: 9-16; எபிரேயர் 11: 20-22

“நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.” - 1 யோவான் 5:4

விசுவாசத்தை மிகவும் ஒதுக்கித் தள்ளுகிற காலத்தில் “ஒரு மனிதன் என்னத்தை விசுவாசிக்கிறான் என்பது பற்றி எனக்கு கவலையில்லை, அவனது வாழ்க்கைதான் கனத்துக்குரியது” என்று ஜனங்கள் கூறக்கூடிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது, விசுவாசம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை என்று பொருள்படுகிறது. மனிதனுடைய கனத்தை முக்கியமான நோக்கமாக கருதப்படுகிறவர்களால் இப்படி சொல்லப்படுகிறது: “நீ பெறுகிற அனைத்திலும், பணத்தையும் செழுமையையும் பெறு; ஏனெனில் இவைகள் இல்லாமல், நீ என்னத்தை விசுவாசித்தாலும், அல்லது யாரை தொழுதாலும் ஒன்றும் பிரயோஜனப்படாது. இந்த வாழ்க்கையில் செழுமையடையவே மாட்டாய். வெற்றியே ஒரே நோக்கமாக அநேகரால் தற்போது அங்கீகரிக்கப்படுகிறது.”

எனினும் வேதாகமத்தின் கருத்து இதற்கு எதிரானதாக இருக்கிறது. தேவனுடைய வசனம் முதலாவது விசுவாசத்தை வைக்கிறது; அந்த விசுவாசத்தின் மேல் குணலட்சணத்தை கட்டுகிறது. எந்த மனிதனாலும் பரிபூரணமான வேலைகளை செய்ய இயலாது என்று தேவன் அறிவிக்கிறார். எனவே அளவீட்டின்படி அவன் கிரியைகளை செய்யவில்லை. விசுவாசமே தேவனுடைய

அளவீடு, சரியான விசுவாசம் உள்ளவர்கள் அவர்களது விசுவாசத்திற்கேற்றபடி கிரியை நடப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்று அவர் உறுதியாக கூறுகிறார். இந்த கொள்கைக்கு இசைவாக வேதாகமத்தில் உள்ள தேவனுக்கு பிரியமானவர்கள் எல்லாம் விசுவாசிகளாக இருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்கிறோம். அவர்களது விசுவாசம் அவர்களை பூரணராக்கவில்லை. அவர்களது கிரியைகள் எப்பொழுதுமே தேவனுடைய பார்வையில் ஏற்புடையதாக இருந்ததில்லை. ஆனால் தீய செயல்களுக்கு அவர்களைத் தண்டித்தார். அவர்களது மகா விசுவாசத்திற்கு வெகுமதி அளித்தார்.

இப்படியாக நாம் வேதத்தில், தேவனுக்கு பிடித்தமானவர்கள் கொடூரமான பாவங்களை செய்து, தீவிரமான தவறுகளை செய்தார்கள், அப்படியிருந்தும் அவர்களது விசுவாசத்தின் நிமித்தமாக, தேவனுடைய கிருபையில் தொடர்ந்து இருந்தார்கள் என்று நாம் பார்க்கிறோம்.

### தேவன் பொல்லாதவர்களை நேசிப்பதில்லை

எழுதப்பட்ட அல்லது வாசிக்கப்பட்ட அனைத்து மத புத்தகங்களிலே வேதாகமம் மிகவும் நேர்மையானது. தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதர்கள், உதாரண புருஷர்களாகவும், மாதிரிகளாகவும் இருக்கத்தக்க குணலட்சணம் உடையவர்கள் செய்திருக்கிற பாவங்களையும் குற்றங்களையும் கூட அது சொல்லுகிறது. தேவன் துன்மார்க்கத்தை நேசிக்கிறார் அல்லது மனுக்குலத்தில் இழிவானவர்கள் அவரது நண்பர்கள் என்று யாரும் யூகிக்கிற அளவுக்கு வேதகாமம் இடங்கொடுக்கவேயில்லை. ஆனால் முற்றிலும் மாறாக மிகவும் உயர்ந்த பட்ச அளவில் நீதியானது வார்த்தை, கிரியை மற்றும் சிந்தையில் கற்பிக்கப்படுகிறது. சத்தியம் மற்றும் நீதியின் வழிமுறையில் தான் தேவனுக்கு முழுமையாக ஏற்புடையவர்களாக இருக்க முடியும் என்று நாம் போதிக்கப்படுகிறோம்.

நாமும் சகல மனுக்குலமும் சுபாவத்திலேயே பாவிகள் என்று தேவன் நமக்கு கூறுகிறார். விழுந்துபோன இனத்தின் அங்கங்களாக நமக்கு எதிராக இருக்கும் தண்டனையையும் நமது சொந்த குற்றத்தையும் நீக்கும்படி நம்மால் எதுவும் செய்ய முடியாது என்று தேவன் நமக்கு கூறுகிறார். அதை நமக்கு திருப்திகரமாக சரி பண்ணுவதற்கு நோக்கம் கொண்டிருக்கிறார் என்று நமக்கு அவர் கூறுகிறார். எனவே நம்மால் தவிர்க்க முடியாததை அல்ல, ஆனால் நம்மால் தவிர்க்க முடிகிறதே, நம்மால் செய்ய முடியாததை அல்ல, நம்மால் செய்ய முடிகிறதே, நமது பொறுப்பாக இருக்கிறது. நமது மேன்மையான அனைத்து முயற்சிகளின் அடிப்படையும் அவரில் நமது நம்பிக்கையின் திசையிலேயே இருக்கும் என்று அவர் நமக்கு கூறுகிறார். இந்த நம்பிக்கையை தான் அவர் விசுவாசம் என்று அழைக்கிறார். விசுவாசமில்லாமல் அவரை பிரியப்படுத்துவது கூடாத காரியம் என்று அவர் உறுதிபடக் கூறுகிறார். வேதாகமத்தின் அனைத்து பாடங்களிலும் இதை நமக்கு அவர் காண்பித்திருக்கிறார்.

### விசுவாசம் என்பது எளிதில் நம்பும் தன்மையல்ல

விசுவாசம் என்பது எளிதில் நம்பக்கூடிய தன்மை என்று அநேகர் தவறாக நினைக்கிறார்கள். இந்த தவறான நம்பிக்கையில், தேவன் அப்படிச் சொன்னார் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டால், எதையும் மற்றும் ஒவ்வொன்றையும் உட்கிரகிக்க தயாராக இருக்கிறார்கள். ஆனால் வேதாகமம் ஊக்குவிக்கிற விசுவாசம் இதுவல்ல. அதற்கு மாறாக, நமது சொந்த கற்பனைகள் அல்லது நமது சக மனிதர்கள் மற்றும் சாத்தானின் வசீகரிக்கும் மாறுபாடுகளின் மேல் கவனம் செலுத்தாமல் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் நிச்சயமாக அறிய வேண்டும் என்றும், அவைகளில் நாம் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த வேண்டும் என்றும் வேதாகமம் நமக்கு போதிக்கிறது.

இந்த காரியங்களின் மாறுபாடான கருத்தை எடுத்துக்கொண்டு விசுவாசத்தின் பேரில் அறியாமையினாலும் மூட நம்பிக்கைகளினாலும் தங்களது பின்னடியார்களைக் கட்டுப்படுத்தி அவர்களது பகுத்தறிவு திறமையை தடுப்பதற்கு நாடுகிறவர்களோடு சண்டை போடுவது நமக்குரியதல்ல. ஒரு வேளை தேவனை கண்டுபிடித்து, அவரது உணர்வுடன் மூட நம்பிக்கைகளில் திருப்தி அடையாமல், ஆனால் ஜீவனுள்ள தேவனுக்காகவும், அவரது உறுதியான வசனங்களுக்காவும், நம்மைப் பற்றிய அவரது சித்தம், அவரது திட்டம் மற்றும் அதில் நாம் பெறப்போகிற பங்கைப் பற்றிய அவரது அறிக்கைகளுக்காகவும் ஏங்குகிறவர்களுக்கு போதிப்பது நமது கடமையாகும். ஆகையால் இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் எல்லாருக்கும் போதிக்க முயற்சிக்காமல், நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களுக்கு மட்டுமே போதித்தனர். இயேசுவின் மொழியில், "கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்."

### கிறிஸ்து வருவதற்கு முன்பாக விசுவாசம்

கடந்த காலத்தைப் பார்த்து, தேவன் தமது விசேஷித்த ஜனங்களை தேடின முறையை நாம் கவனிப்போம். நமது இனத்திற்கான தேவனுடைய திட்டங்களை பற்றிய முதலாவது அறிவிப்பு ஆபிரகாமிடம் செய்யப்பட்டது. தேவன் ஆபிரகாமிடம் பேசியது: "என்னுடைய சமூகத்தில் நட, நீ பூரணனாக இரு." அதாவது பூரணனாயிருப்பதற்கு உன்னால் முடிந்ததை செய். ஆபிரகாம் தேவனிடம் தனது விசுவாசத்தை வெளிப்படுத்திய பிறகு இன்னும் அவருக்கு தேவன் பரீட்சைகளைக் கொடுத்தார். அந்த சோதனைகளில் அவர் கீழ்ப்படிந்து தனது சொந்த நாட்டை விட்டு கானானில் வாழும்படி சென்றார். தேவன் அவரை தமது நண்பன் என்று கூறுகிற அளவுக்கு அவர் தனது மாபெரும் விசுவாசத்தை வெளிப்படுத்தினார். இதனால் மனுக்குலத்தைப் பற்றிய தெய்வீக திட்டங்களில் முதலாவது வெளிப்படுத்தல் அவருக்கு கொடுக்கப்பட்டது.

மனுக்குலத்தின் மேல் சாபம் இருந்ததை ஆபிரகாம் அறிந்திருந்தார். இந்த சாபத்தின் கீழ் மனுக்குலம் துன்பப்பட்டு கல்லறைக்கு செல்கிறது என்பதையும் அறிந்திருந்தார். சாபத்திற்கு பதிலாக அவர் ஒரு ஆசீர்வாதத்தை அனுபக்கூடிய காலம் வரும் என்கிற தேவனுடைய அறிவிப்பும் அவருக்கு கொடுக்கப்பட்டது. மனிதர்கள் இன்னும் அதிக அபூரணராகி, மரணத்தில் அழிந்து போகிறதற்கு பதிலாக, ஒரு மாற்றம் வந்து, அதன் மூலம் மரிக்கும் நிலைமையிலிருந்து மீட்கப்பட்டு, கல்லறையின் வல்லமையிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று ஆபிரகாமுக்கு பொருள்பட்டது.

தேவனுக்கு கூட இதை ஏற்படுத்துவது ஒரு ஆச்சரியமான செய்தியாக இருந்தது. ஆபிரகாம் கூட குழந்தை பருவ விசுவாசத்துடன் அந்த செய்தியை விசுவாசித்தார். தேவன் ஆபிரகாமையும் அவரது சந்ததியையும் ஆசீர்வதித்து, அவர் மூலமாக குழந்தைகள்

வந்து, அவர்கள் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் வேலையை செய்வார்கள் என்றும் அவர்கள் அனைவரையும் பாவம், சாத்தான் மற்றும் மரணத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி விடுவிப்பார்கள் என்றும் தேவன் ஆபிரகாமுக்கு அறிவித்தார். சுருக்கமாக சொல்லப்பட்ட இவை அனைத்தும் இந்த வசனத்தில் உள்ளன. "உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 28:14)

அந்த வாக்குத்தத்தத்தில் விசுவாசம் வைக்க என்ன இருந்தது? ஆபிரகாமுக்கு இது என்ன அர்த்தத்தைக் கொடுத்தது? அதிலிருந்து ஆபிரகாமின் சிந்தை பரந்த எல்லையில் எடுத்துக்கொள்ளும் என்று பொருள்பட்டது. அதாவது தனக்கு அடுத்த சந்ததியையும் ஆடு, மாடுகளையும் அண்டை வீட்டாரையும் அர்த்தப்படுத்தாமல் உலக மனுக்குலம் முழுவதையும் அர்த்தப்படுத்தியது. தேவன் ஆபிரகாமின் சந்ததியை இந்த அளவுக்கு கனப்படுத்துவாரானால், ஆபிரகாம் எல்லாவற்றிலும் தேவனுடனும் அவரது மாபெரும் வாக்குத்தத்தத்துடனும் ஒத்துழைக்க நாட வேண்டும் என்றும் அது அர்த்தப்படுத்தியது.

வருடக்கணக்காக ஆபிரகாமின் விசுவாசத்தை தேவன் சோதித்தார். எனினும் இன்னும் அவரை நம்பினார். "தேவனுடைய வாக்குத்தத்தத்தை.... அவன் சந்தேகப்படவில்லை." ஈசாக்கு பிறந்த பிறகு, இன்னும் வேறு குழந்தை இல்லாதபோது இந்த வாக்குத்தத்தத்தின் பிள்ளையை, முழு வாக்குத்தத்தம் மையப்படுத்தப்பட்டவனை பலியிடும்படி தேவன் ஆபிரகாமுக்கு கட்டளையிட்டார். என்ன ஒரு விசுவாச சோதனை! ஈசாக்கை மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்று எண்ணி அவனை பலியிட தயாராகும் அளவுக்கு எப்படிப்பட்ட மாபெரும் விசுவாசத்தில் அவர் அபிவிருத்தி அடைந்திருந்தார்! ஓ, தேவனில் எப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை! ஓ, எப்படிப்பட்ட ஒரு விசுவாசம்! தெய்வீக வல்லமையில் எப்படிப்பட்ட உயர்வான ஒரு மதிப்பு! தேவனுடைய பிள்ளைகளின் மத்தியில் பரவியிருக்கிற இப்படிப்பட்ட விசுவாசத்தினால் தேவ செய்தியைக் கொண்டு உலகில் எதை நிறைவேற்ற முடியாமல் இருக்கும்! இப்படியாக தம்மேல் நம்பிக்கை வைத்திருக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவன் என்னத்தை செய்யாதிருக்கக்கூடும்!

இதே போல் தான் ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் இருந்தது. அவர்கள் அந்த வாக்குத்தத்தத்தை நம்பினார்கள். அது அவர்கள் வாழ்க்கை முழுவதும் செல்வாக்கு செலுத்தியது. அது அவர்களை தெய்வ பக்தியுள்ளவர்களாக்கியது. அது வாழ்க்கையின் ஒவ்வொரு ஆர்வத்தையும் உருவேற்படுத்தியது. தேவன் இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை எப்படி நிறைவேற்றுவார் என்பதைப் பற்றி ஒன்றும் அறியாதிருந்தும் அவர்களது விசுவாசத்தை அதன்மேல் வைத்தார்கள். தேவன் தமக்கு பிரதிநிதிகளாகவும் வாயாகவும் இருந்து உலகத்திற்கு போதிக்கவும், உலகத்தை ஆளுகை செய்யவும், உலகத்தை உயர்த்தவும் மரித்தோரை உயிர்த்தெழுப்பவும், ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்துபோன அனைத்தையும் மனுமக்களுக்கு திரும்பி கொண்டு வரவும், அவர்களது சந்ததியிலிருந்து அவர் ஒரு பரிசுத்த ஜனத்தை எழும்பப்பண்ணுவார்.

அவர்கள் பலவீனமாயிருந்திருந்தால், அவர்கள் அநேக இடறுதலுக்கான சந்தர்ப்பங்களை பெற்றிருந்திருப்பார்கள். அவர்கள் உலக ஞானிகளாக இருந்திருந்தால் தேவன் இவைகளை செய்து எப்படி நீதிபரராக இருக்க முடியும் என்று கேட்டிருப்பார்கள். தீர்ப்பை ஒரு தடவை அறிவித்த பிறகு, எப்படி அவர் குற்றத்தை நீக்க முடியும்? ஆனால் அவர்களது விசுவாசம் தடுமாறவில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தில சொல்லிக் கொண்டதாவது: "தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை செய்து முடிப்பார். அதை நிறைவேற்ற தமக்கே உரிய வழியை வைத்திருப்பார்."

அடுத்து முழு இஸ்ரேல் தேசமும் தேவனுடைய ஜனங்கள் என்று அழைக்கப்பட்டது. முழு தேசமும் தேவனுடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்தது. இந்த உடன்படிக்கை நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய மோசேயின் மூலம் நடந்தது. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் மேல் வைத்த விசுவாசத்தினால் இஸ்ரயேலர்கள் தூண்டப்பட்டார்கள். மரித்த மற்றும் உயிரோடிருக்கிற ஆதாமின் இனத்தார் அனைவரும் ஆபிரகாமின் சந்ததியினரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே அந்த வாக்குத்தத்தம்.

தேவனுடைய பிரமாணத்தை குற்றமற்றதாக கடைபிடித்தால் இஸ்ரயேல் ஜனங்கள் தேவனுக்கு ஒரு பரிசுத்த ஜாதியாக இருப்பார்கள் என்று சீனாய் உடன்படிக்கை உறுதியளித்தது. இந்த நிகழ்வில் தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை அவர்களுக்குள் நிறைவேற்றுவார் என்று தேவன் உடன்படிக்கை செய்தார். அபூரணமான மனுக்குலம் அவரது பூரண பிரமாணத்தை கடைபிடிக்க இயலாது என்பதை தேவன் அறிந்திருந்தார். அவர்கள் அதை கடைபிடிக்க முயற்சி செய்யட்டும், அதன் மூலம் அவர்கள் பாடத்தை கற்றுக்கொள்ளட்டும் என்று தேவன் நினைத்திருப்பார். அந்த பாடம் அவரது நீதியைப் பற்றிய போதனைகளை தூதர்களுக்கும் கொடுக்கும் என்று நினைத்திருப்பார். இன்னும் அது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் அறிவுரையைக் கொடுத்து அவர்களை அபிவிருத்தி செய்யும். ஏனெனில் பிற்காலத்தில் அவர்கள் மூலம்தான் ஆசீர்வாதம் வரும். இதை பரிசுத்த பவுல் இப்படியாக கூறி விளக்குகிறார்: "வாக்குத்தத்தத்தை பெற்ற சந்ததி வருமளவும் நியாயப்பிராணமானது அக்கிரமங்களின் நிமித்தமாக கூட்டப்பட்டது." (கலாத்தியர் 3:19)

வேறு வார்த்தையில் சொல்வோமானால் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர் அபிவிருத்தி பண்ணப்படுவதற்கு நூற்றாண்டுகளுக்கு முன்பதாகவே தேவன் இந்த வேலையை இஸ்ரயேலரிடம் நிழலாக ஆரம்பித்தார். ஆனால் தேவனிடம் நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்போம் என்று உடன்படிக்கை செய்து, அதை நிறைவேற்ற முடியாமல்போன ஜனங்களுக்கு தேவன் எந்தவித தீமையையும் செய்யவில்லை. மாறாக, அந்த பிரமாணத்தை கடைபிடிக்க முயற்சித்ததற்காக ஒரு ஜனமாக ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மேலும் அவர்களது தோல்வி மற்றும் விசுவாசக் குறைவினாலும் அவர்கள் மேல் வந்த தண்டனைகள் மூலமும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

ஆனால் ஆபிரகாமின் விசுவாசத்தில் பங்குபெற்ற சகல ஜனங்களையும் தேவன் விசேஷித்த விதமாக ஆசீர்வதித்தார். ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகிய கிறிஸ்து வருவதற்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாக

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபோடு, தேவனை தங்களது விசுவாசத்தினால் பிரியப்படுத்தின குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்களை அப்போஸ்தலர் பவுல் கணக்கிடுகிறார். அந்த பழங்கால பாத்திரர்கள், உயர்ந்த நிலையில் ஆவிக்குரிய நிலைமையில் ஆபிரகாமின் சந்ததியாக இல்லாதிருந்தாலும் பூமிக்குரிய நிலையில் ஆசீர்வதிக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக இருப்பார்கள். சகல ஜாதிகளுக்கும் முடிவாக விரிவுப்படுத்தப்படும் பரலோக ஆசீர்வாதத்திற்கான வழியாக இருப்பார்கள்.

கடந்த அந்த சகல நூற்றாண்டுகளாக யூத ஜனங்களை தூண்டியது என்ன? ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று தேவன் மேல் வைத்த விசுவாசமில்லையா? நிச்சயமாக அது தான்! அந்த வாக்குத்தத்தம் தான் இன்னும் யூதர்களை தூண்டிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் இன்னும் யூதர்களாக இருக்கிறார்கள். ஆபிரகாமின் விசுவாசத்தை இழந்தவர்கள் அந்த வாக்குத்தத்தத்திற்கு சொந்தக்கரராக இருக்கவே முடியாது. ஏனெனில் வாக்குத்தத்தம் விசுவாசத்தின்படியானது.

தேவன் யூதர்களோடு செய்த ஆதி வாக்குத்தத்தத்தை குறித்து யூத ஜாதியைப் பற்றி பரிசுத்த பவுல் தயையுடன் இப்படியாக கூறுகிறார். "இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்து வருகிற நம்முடைய பன்னிரெண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நம்பியிருக்கிறார்கள்." (அப்போஸ்தலர் 26:7) அந்த நம்பிக்கையை பராமரித்து காத்துக்கொண்டிருப்பதற்கு தக்கதாக சகல யூதர்களும், வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறவைகள், அவர்களது கனவுகளுக்கு மேலாக உண்மையாகவே வரும்.

## கிறிஸ்து வந்ததிலிருந்து விசுவாசம்

கிறிஸ்துவின் வருகை தெய்வீக நோக்கத்தை மாற்றவில்லை. ஆகையால் தேவனுடைய பிள்ளைகளின் விசுவாசத்தை மாற்றவில்லை. ஆரம்பத்தில் ஆபிரகாமுக்கு தேவன் போதித்த அதே சுவிசேஷத்தையே இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் நம்பி போதித்தாக பரிசுத்த பவுல் கூறுகிறார். (கலாத்தியர் 3:8) அப்போஸ்தலரின் செய்தி, ஆபிரகாமின் சந்ததியினால் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே. ஆனால் அப்பொழுது இன்னொரு அம்சம் அறிவிக்கப்படவும் விசுவாசிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது. அதாவது மேசியாவாகிய இந்த ஆபிரகாமின் சந்ததியை கொடுக்கும்படியான வேலையை தேவன் ஆரம்பித்திருந்தார். தேவன் தமது குமரானாகிய லோகாசை அவர் ஆவிக்குரிய நிலையில் ஆபிரகாமின் சந்ததியாவதற்கும், முடிவில் ஆதி வாக்குத்தத்தத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நிறைவேற்றவும் உலகிற்கு அனுப்பியிருந்தார்.

சகல யூதர்களும் மேசியாவை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அவர்கள் உத்தம இஸ்ரயேலர்கள் அல்ல. அவர்கள் அனைவரும் உண்மையான விசுவாசத்தை பெற்றிருக்கவில்லை. ஆகையால் தேவன் அவர்களில் சிலரை இந்த காரியங்களில் குருடாயிருக்க அனுமதித்தார். மற்றவர்களுக்கு விசுவாசக் கண்களை, ஒரு விசேஷித்த அபிஷேகம் பண்ணப்பட்ட புரிந்துகொள்ளும் கண்களை கொடுத்தார். இந்த வகுப்பாருக்கு இயேசு கூறியதாவது: "உங்களுக்கோ தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு அருளப்பட்டிருக்கிறது." அதாவது மேசியாவின் ராஜ்யத்தின் மூலம் ஆபிரகாமின் சந்ததி பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்க வேண்டும்

பிறகு விசுவாசத்தின் அடுத்தபடி வந்தது. ஆதிகால சீஷர்கள் கூறியதாவது: இயேசுவை, தேவ குமாரனை முன்னுரைக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததி என்று விசுவாசிக்க நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அவர் பூமியை ஆசீர்வதிக்கிற வேலையை செய்வதாக நாங்கள் காணவில்லை. அவரது பலியினால் உறுதிபண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை உலகிற்கு கொடுப்பதற்கு வெற்றியுடன் ஆளுகை செய்வதற்கு பதிலாக அவர் பரலோகம் சென்றிருக்கிறார். நாங்கள் எப்படி இதை புரிந்து கொள்வோம்?

## கிறிஸ்துவானவர் உங்களுக்குள் இருப்பதே இரகசியம்

"பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்," அதுவே இன்னும் இருந்தது. ஆனால் இப்பொழுது பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ், அவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது, மேசியா என்பது ஒரு நபர் அல்ல, பல நபர்கள். இயேசு மாத்திரம் ஆபிரகாமின் சந்ததியல்ல. இயேசுவை தலையாகவும் சபை அங்கங்களை சரீரமாகவும் கொண்ட கிறிஸ்துவே சந்ததியாக இருப்பார்கள் என்று அப்போஸ்தலர்கள் மூலமாக தேவன் பதிலளிக்கிறார். பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்." உருவகத்தில் இயேசு ஈசாக்கின் தலையாவும், சபை ஈசாக்கின் சரீரமாகவும் குறிப்பிடப்படுகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அபிவிருத்தி செய்வதற்கு சுவிசேஷ யுகம் முழுவதும் தேவைப்பட்டது.

வேறொரு உருவகத்தில் இயேசு, ஈசாக்குக்கும், சபை ரெபேக்காளுக்கும் ஒப்பிடப்படுகிறது. இந்த உருவகத்தின்படி உண்மையான ஈசாக்கு மகிமைக்குள் நுழைந்திருக்கிறார். ஆனால் உண்மையான ரெபேக்காள் அபிவிருத்தியடைவதற்கு காத்திருக்கிறாள். சரியான ஏற்ற காலத்தில் ஆபிரகாமின் சந்ததியாகிய அவர் வந்து அவரது மணவாட்டியை அவரே ஏற்றுக்கொண்டு அவர்கள் இருவரும் ஒருவராவார்கள். அந்த ஒருவர் மூலமாக, ராஜ்யத்தின் மகிமை மூலமாக, ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் பூமியிலுள்ள சகல வம்சங்களுக்கும் வரும்.

இதுதான் "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்." சுவிசேஷ யுகத்தில் நமக்காக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை. சகல மனுக்குலத்தையும் ஆபிரகாமின் சந்ததி மூலமாக ஆசீர்வதிக்க தேவன் பயன்படுத்தும் விசுவாசம் இதுதான். நாம் உண்மையான விடாமுயற்சி மற்றும் நம்பிக்கையுடனும் இரட்சகரான இயேசுவோடு மேசியாவின் ராஜ்யத்தின் சகல மகிமையான சுதந்தரத்தில் உடன் சுதந்தரராக ஆகும் நம்பிக்கையே அந்த விசுவாசம்.

வேத வாக்கியங்களில் தேவன் செய்திருக்கிற மற்றும் உண்டு பண்ணியிருக்கிற ஏற்பாடுகளில் அவரது ஞானத்தை நாம் சந்தேகப்படாதிருப்போமாக. அதாவது ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மேல் ஆதாரம் கொண்ட விசுவாசமே தேவனுடைய வல்லமையாக இருக்கிறது. இதன் மூலமாக அவரது அனைத்து பிள்ளைகளும் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் பிரிக்கப்பட்டு

அவர்களது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில் அவருக்காக பரிசுத்தமாக்கப்படுவது அவரது சித்தமாக இருக்கிறது. இதுதான் "பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்." உலகத்தின் ஆவியிலிருந்து ஜெயம் பெறவும், இங்கேயும் மறு உலகத்தின் ஊழியத்திற்காகவும் பிரிக்கப்படவும், தேவனுக்கு பரிசுத்தமாக்கப்படவும் நமக்கு சக்தியளிக்கக் கூடிய விசுவாசம் இதுதான்.

**R5245** Interesting Questions

# ஆவலை தூண்டும் கேள்விகள்

## பெரும்பாதையான பரிசுத்த வழியைப் பற்றிய கூடுதலான காரியம்

**கேள்வி :** பெரும்பாதையான பரிசுத்த வழியில் நடக்கும்படி யாராவது பலவந்தப்படுத்தப்படுவார்களா அல்லது கட்டாயப்படுத்தப்படுவார்களா?

**பதில் :** தற்காலத்தில் பெரும் பாதையான பரிசுத்த வழி இல்லை. ஆகையால் சுவிசேஷ யுகத்தில் யாரும் இந்த வழியில் நடக்கவில்லை. மகா ராஜா காரியங்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, தற்கால ஒழுங்குகளை நீக்கிப் போட்டு, பரலோக இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வரை அப்படிப்பட்ட வழி இருக்காது. பிறகு ஒரு மாபெரும் பரிசுத்த வழி தயார்படுத்தப்பட்டு, அதில் நீதிமான்கள் நடப்பார்கள். சுவிசேஷ யுகத்தில் இடுக்கமான வழி மற்றும் விசாலமான வழி ஆகிய இரண்டு வழிகள் இருக்கிறது. (மத்தேயு 7:13,14) முந்தின வழி இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்க விரும்புகிறவர்களுக்கானது. அதன் வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமானது. பிந்தின வழி அழிவுக்கு போகிறதாக இருக்கிறது. இந்த விசாலமான வழியில் மனுக்குலம் கல்லறைக்கு தீவிரமாக சென்று கொண்டிருக்கிறது.

ஆண்டவரின் அடிச்சுவட்டில் ஏற்றுக்கொள்ளும் விதமாக நடக்கிறவர்கள் மிகவும் விருப்பத்துடன் செய்ய வேண்டும். அவர்களுடையது ஒரு மனமார்ந்த அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும். பலவந்தப்படுத்துவது என்ற எண்ணமே கிடையாது. இப்படியாக சிறு மந்தையானது இடுக்கமான வழியில் ஓடுகிறவர்கள்; ஆனால் திரள் கூட்டத்தாரின் அனுபவங்கள் பலவந்தப்படுத்துவதாக இருக்கும். ஒரு விசேஷித்த வழியை அல்ல, என்ன மார்க்கத்தை பின்பற்ற வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிப்பார்கள். ஒரு மனிதனை பலந்தப்படுத்தி ஒரு கப்பலில் வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கும், அப்படி செய்தவற்கு விருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிட்ட செல்வாக்குகளை கொண்டு வருவதற்கும் வித்தியாசம் உண்டு.

அடுத்த யுகத்தில், உலகின் மாபெரும் பரிசுத்த வழி திறக்கப்படும்போது, (ஏசாயா 35:8) சகல மனுக்குலத்தையும் தேவனுடைய கிருபைகளின் சத்திய அறிவுக்கு கொண்டு வருவதற்காக பலவந்தப்படுத்தப்படுவார்கள். அப்பொழுது தவறு செய்பவர்கள் சரியான அடிகளால் தண்டிக்கப்படுவார்கள். மனுக்குலம் மாபெரும் பரிசுத்த வழியில் செல்வதற்கு பலவந்தப்படுத்தப்படுவார்கள் என்று கூறுவது நீதிக்கு தூரமாக இருக்கும். அதன் மீது செல்லுகிற அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் அது மேல் நோக்கி செல்லும் பாதையாக இருக்கும். பிதாவானவர் நித்திய ஜீவனை கொடுக்கப்போகிறவர்களைப் பற்றிய அவரது மன உணர்வைப் பற்றி நமது இரட்சகர் கூறியிருப்பதாவது: " உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மை தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும் -படி பிதாவானவர் விரும்புகிறார்." (யோவான். 4:23)

## பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்

**கேள்வி :** "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்." (1 யோவான் 4:18) இந்த வசனத்தில் என்ன வகையான பயம் குறிப்பிடப்படுகிறது?

**பதில் :** பயம் என்பது நிச்சயமற்ற தன்மையில் பிறப்பிக்கப்படுகிற மன நிலைமையாக இருக்கிறது. சில காரியங்களுக்கு நாம் பயப்பட வேண்டும். சில காரியங்களுக்கு நாம் பயப்பட தேவையில்லை. சத்துருவானவன் மனுக்குலத்தின் விழுந்துபோன நிலைமையை பயன்படுத்திக்கொண்டு. தேவனுக்கு பயப்படும்படி தூண்டுவதாக காணப்படுகிறது. ஏனெனில் நாம் யாருக்கு பயப்படுகிறோமோ அவர்களை தவிர்ப்பது இயற்கையான ஒன்றாக இருக்கிறது. மனுக்குலம் தாங்கள் சுபாவத்தில் பாவிகள் என்பதையும் பாவத்திற்கான தண்டனை உண்டு என்பதையும் உள்ளுணர்வால் உணருகிறார்கள். பாவத்தின் விளைவாகிய இந்த பயத்தை சத்துருவானவன் பயன்படுத்திக்கொண்டு தேவனைப் பற்றிய ஒரு பயத்தை கொஞ்ச கொஞ்சமாக அவர்கள் மேல் செலுத்த முயற்சிக்கிறான். அவர்களது அபூரணமான உள்ளங்களில் தேவன் அநீதியானவர் என்றும், பாவம் மற்றும் பாவிகளின் மேல் மிகவும் கடுமையானவர் என்றும் சித்தரிக்கிறான். ஏனெனில் அவர்களுக்காக நித்திய ஆக்கினைக்கான ஒரு இடத்தை தேவன் ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

நாம் தேவனைப் பற்றியும், பிரபஞ்சத்தை ஒழுங்குப்படுத்த அவர் பயன்படுத்தப் போகிற கொள்கைகள் பற்றியும் ஒரு தெளிவான அறிவுக்கு நாம் படிப்படியாக வருகிறபடியால், நாம் இந்த முறையற்ற பயத்தை இழக்கிறோம். அதற்கு பதிலாக நமக்கு ஒரு அன்பு அவர்மேல் வருகிறது. அவர் நம்மை நேசிக்கிறார் என்கிற உணர்வும் வருகிறது. தேவன் மனுக்குலத்தை நேசிக்கிறார் என்றும், அவர்கள் நித்திய ஜீவனைப் பெற ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கிறார் என்றும் நாம் உணருவதற்கு ஏற்ப அவர் மேலுள்ள நமது அன்பு வளருகிறது. பூரணமான அன்பை தேவன் மேல் செலுத்த நாம் வந்த பிறகு, தேவன் பயங்கரமானவர் என்கிற சகல பயமும் புறம்பே தள்ளப்படுகிறது.

எனினும் நமது அறிவும் அன்பும், தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்வதற்கு பயப்படுகிற பயத்தை புறம்பே தள்ளக்கூடாது; ஏனெனில் தேவனிடத்தில் வைக்கக்கூடிய சரியான பயத்தை (பயபக்தியை) நீக்கவே கூடாது. நாம் பயபக்தியான அன்பை பெற்றிருக்கிற அளவுக்கு நாம் சரியான பயத்தை பெற்றிருப்போம். தேவன் நேசிக்கிற மற்றும் பாராட்டுகிற ஒரு சகோதரனையோ அண்டை வீட்டாரையோ துன்பப்படுத்த யார் பயப்படாதிருப்பார்கள்? நமது நீதி, ஞானம் மற்றும் அன்பான தேவனுக்கு விரோதமாக தவறு செய்ய அதிகமாக நாம் பயப்பட வேண்டும்.

“பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்” என்ற கொள்கை கணவனுக்கும் மனைவிக்குமிடையே, பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையே கிரியை செய்ய வேண்டும். மனைவி கணவனுக்கு பயந்தால் அங்கே பூரண அன்பிருந்தாலும் அவளால் சந்தோஷமாக இருக்க முடியாது. அதே போல குழந்தைகள் பெற்றோர் ஒருவரிடமோ அல்லது இருவரிடமோ பயம் இருந்தால் அவர்களால் தங்கள் பெற்றோர்களுக்கு, பெற்றோருக்குரிய உண்மையான அன்பை செலுத்த முடியாது. ஒவ்வொருவரும் இன்னொருவரை காயப்படுத்தவோ குற்றம் செய்யவோ பயப்பட வேண்டும். தேவன் தம்முடைய அறிவுள்ள சிருஷ்டிகள் அனைவரும் அப்பியாசப்படுத்த வேண்டும் என்று விரும்புகிற பூரண அன்பைப் பெற ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

## நீதியான நியாயத்தீர்ப்பும் விமர்சனமும்

**கேள்வி :** “நீதியான நியாயத்தீர்ப்புக்கும்” விமர்சனத்திற்கும் நாம் எப்படி பேதம் காண்பது?

**பதில் :** கர்த்தர் கூறுகிறதாவது: “தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்.” (யோவான் 7:24) பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: “ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும், தீர்ப்பு சொல்லாதிருங்கள்.” (1 கொரிந்தியர் 4:5) பிறகு நீதியான தீர்ப்பு என்பது என்ன என்ற கேள்வி எழுகிறது. நீதியான நியாயத்தீர்ப்பு என்பது ஒரு சரியான தீர்மானம். ஆனால் நாம் மனதை அறிய முடியாததால் நாம் எப்படி ஒரு சரியான தீர்ப்பை சொல்ல முடியும்? நாம் ஒருவருக்கொருவர் மனதை அறிய முடியாது. ஆகையால் நாம் யாரையும் தீர்ப்பு செய்யக் கூடாது.

நாம் மற்றவர்களது இருதயம், நோக்கங்கள் அல்லது எண்ணங்களை அறிய முடியாததால் நாம் என்ன தீர்ப்பிட முடியும்? வேத வாக்கியங்களின் பதில் என்னவென்றால், நாம் ஒருவருக்கொருவரது நடத்தையை தீர்மானிக்க முடியும். கர்த்தரின் ஜனங்களில் ஒருவர் ஒரு தவறான காரியத்தை செய்வதை நாம் கண்டால், “அன்பான சகோதரரே (சகோதரியே), உங்கள் நடத்தை தேவனுடைய வசனத்திற்கு விரோதமாக காணப்படுகிறது. அது தவறான கனிகளை கொண்டு வரக்கூடும்” என்று நாம் சொல்ல வேண்டும். ஒரு வேளை அந்த நபர் “நான் தவறு செய்வதாக எனக்கு தெரியவில்லை” என்று கூறினால் நாம் அவரது மனதை குற்றம் கூறவோ அல்லது தீர்ப்பிடவோ கூடாது. ஆனால் நாம் நல்ல நடத்தைக்கும் தீய நடத்தைக்கும் இடையே தீர்ப்பு செய்ய வேண்டும். சரியான நேரத்திலும் சரியான இடத்திலும் காரியத்தில் கவனம் செலுத்தி, அதை அங்கேயே விட்டுவிட வேண்டும்.

நமக்கு உரிமையில்லாத, இருதயத்தை தீர்ப்பு செய்தலுக்கும், நாம் செய்ய வேண்டிய காரியமாகிய நடத்தையை தீர்ப்பு செய்தலுக்கும் வித்தியாசம் உண்டு. எனினும் மற்றவர்களது நடத்தையை நாம் தீர்மானிப்பது எப்பொழுதுமே சரியானதாக இருக்கும் என்று கூற முடியாது. நாம் அனைவரும் தவறு செய்யும் இயல்பு உடையவர்கள்.

நாம் ஒரு சகோதரனிடம் சென்று “சகோதரரே, உங்கள் நடத்தை தவறாக இருப்பதாக காண்கிறேன். ஆனால் நீங்கள் நன்மை செய்ய விரும்புவீர்கள் என்பது நிச்சயம். அதை விளக்க முடியுமா” என்று கேட்டால், நாம் கெட்ட கனி என்று நினைக்கும் பொழுது அவர் அது நல்ல கனி என்று நிரூபிக்கலாம். நாம் காரியத்தை தவறாக புரிந்து கொண்டிருக்கிறோம். நாம் சகோதரனை கண்டனம் செய்யாமல் அவரிடம் நேரடியாக சென்று அவரது கருத்தை பெற வேண்டும். நாம் அதை ஏற்றுக்கொள்ள இயலாதிருந்தால், நமக்கு எப்படி காணப்படுகிறது என்று அவரிடம் கூறி, அவரது மனதை தீர்க்க சொல்லி கேட்டுக் கொள்ளலாம். இதற்குமேல் வேறு எதுவும் நாம் செய்ய கூடாது.

## அவயவங்களை சரீரத்தில் வைத்தல்

**கேள்வி :** “தேவன் தமது சித்தத்தின்படி அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்” என்பது எதைக் குறிக்கிறது? (1கொரிந்தியர் 12:18)

**பதில் :** தற்காலத்தில் கிறிஸ்துவின் சபை பயிற்சி காலத்தில் இருக்கிறது. சில சமயங்களில் நாம் சபையின் போராளி அங்கங்கள் என்று கூறுகிறோம். நாம் சபையின் போராளி அங்கமாக இருப்பது நம்மை சபையின் ஜெயவீரர் என்று நிரூபிக்காது. “ மரண பரியந்தம் உண்மையுள்ளவராக” இருப்பவர்கள் மட்டுமே சபையின் ஜெயம் கொள்ளும் வீரராக இருப்பார்கள். சபையின் உயர்ந்த நிலையில் தேவனால் வைக்கப்பட்டிருந்த பரிசுத்த பவுல் தான் ஆகாதவனாய் போகாதபடிக்கு பயந்திருந்தார். அவர் கூறியதாவது: “மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.” (1 கொரிந்தியர் 9:27) நாம் மாம்சத்தில் இருக்கும் போது நமக்கு பல்வேறு விதமான சலுகைகளும் சந்தர்ப்பங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முடிவில் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அப்பாலிருக்கிற மகிமையில் நாம் பங்கு பெறுவதும் இங்கே நமது உண்மைத் தன்மையை பொருத்தே இருக்கும்.

அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: பல்வேறு அங்கங்கள் “அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.” (எபேசியர் 2:21) இந்த உருவகத்தை நாம் சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இல்லையென்றால் நாம் குழப்பத்தில் விடப்படுவோம். ஆலயத்தில் கற்கள் ஓரளவிற்கு ஒன்றுக்கொன்று வேறுபடுகிறது. “சீர்ற்ற தொகுதி வேலையுடனான” கட்டிடம் என்று அழைக்கப்படுவதில் சிறிய கற்களுக்குரிய இடமும் பெரிய கற்களுக்குரிய இடமும் இருக்கும். இது நாம் சில விஷயத்தில் ஆலயத்தில் சிறிய கல்லாகவோ அல்லது பெரிய கல்லாகவோ இருப்பதை குறிப்பிடுகிறது. திரைக்கப்பால் நாம் பெறப்போகிற சலுகைகளையும் கனத்தையும் இது குறிக்கிறது.

அப்பாலிருக்கிற வேலையில் பெரும்பங்கை பெறுவதற்காக பரிசுத்த பவுல், அதிக வேலைகளை செய்யவும் சுயத்தை வெறுப்பதிலும் சோதனைகளிலும் அதிக பங்கை பெறவும் முயற்சித்ததாக கூறுகிறார். அவர் சுய உயர்வை விரும்பினார் என்றோ அல்லது பெருமை உடையவராகவோ அல்லது சுயத்தை தேடுகிறவராகவோ இருந்தார் என்றோ இது பொருள்படவில்லை. நாம் அடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிற நமது ஆண்டவரின் சாயலை, மகிமையான குணலட்சணத்தை நாம் அடைந்தால் நாமும் நமது சுயத்தை செய்ய விரும்பாதிருக்க வேண்டும்.

## “எருசலேம்..... நம் எல்லாருக்கும் தாயானவள்”

**கேள்வி :** “மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்.” ( கலாத்தியர் 4:26 ) இந்த வசனத்தில் “நம்” என்பது யாரைக்

குறிக்கிறது? ஆவிக்குரிய எருசலேம் எப்படி "நம்மெல்லாருக்கும் தாயாக இருக்கிறது?"

**பதில் :** இங்கே அப்போஸ்தலர், சாதாரணமாக வேத வாக்கியங்களில் காணப்படுகிற உருவக பாஷையை பயன்படுத்துகிறார். இதில் ஒரு நகரம் அதில் வசிக்கிறவர்களின் தாயாக குறிப்பிடப்படுகிறது: உதாரணத்திற்கு, "எருசலேமின் குமாரத்திகள்," "சீயோன் குமாரத்திகள்," "சோதோமும் அவள் குமாரத்திகளும்" முதலானவைகள். "நம்" வகுப்பார் என்பது தேவனுடைய பரிசுத்தவான்களை குறிக்கிறது. பரிசுத்தவான்களின் குடியுரிமை பரலோகத்தில், பரலோக எருசலேமில் இருக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதல் வரை இது கட்டப்படாது. விசுவாசத்தினால் நாம் முன்னே நோக்கி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலைமையையும், அதில் நமது குடியுரிமையைப் பற்றி பேசுகிறோம்.

கிறிஸ்துவைப் போல் சபையானது அதே தாய் – உடன்படிக்கையின் கீழ் அபிவிருத்தியடைகிறது. ஏனெனில் நாம் அவரது அங்கங்கள். அவருடையது ஒரு பலியின் உடன்படிக்கையாக இருந்தது. "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்." (சங்கீதம் 50:5) மனிதனாகிய கிறிஸ்து இயேசு, பிதாவானவருடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்தார். அவரது மாம்சத்தை, பூமிக்குரிய சுபாவத்தை பலியிடுவது என்று அதற்கு பொருள். இந்த பலிக்கு பலனாக, பிதாவானவர் அவரை, "தூதர்களுக்கு மேலாக" தெய்வீக சுபாவத்தின் புது சிருஷ்டியாக ஆக்கினார்; உலகத்தை ஆசீர்வதிக்கும் மகா மேசியாவாக அமைத்தார்.

தற்போது நமது கர்த்தரை முன் உதாரணமாக பின்பற்றி, அவரது அடிச்சுவட்டில் நடந்து, அதே பலியின் உடன்படிக்கையை நிறைவேற்றுகிறவர்களுக்கு, பிதாவானவரின் திட்டத்தை நிறைவேற்றி, தமது பலியின் புண்ணியத்தை சாட்டுகிறார். இவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் உலகத்தை ஆசீர்வதிக்கும் மேசியாவின் மாபெரும் வேலையில் பங்கு பெறுவார்கள். இவர்கள் புதிய எருசலேமை, ஆயிர வருட இராஜ்யத்தை அமைப்பார்கள். விசுவாசத்தினால் நாம் அதன் பிள்ளைகளாக இருக்கிறோம். இப்பொழுது கூட நமது குடியுரிமை பரலோகத்தில் இருக்கிறது.

### சபை பாகுபாடில்லாத பரந்த கேள்விகள்

கீழ்க்கண்ட கேள்விகளை தன்னிடம் தண்ணீர் ஞானஸ்நானத்திற்காக வருகிறவர்களிடம் சகோதரர் ரசல் அவர்கள் வைப்பார். அவை பரந்த அளவில் இருப்பது கவனிக்கப்படும். எந்த கிறிஸ்தவனும், அவனது பாவ அறிக்கை எதுவாக இருந்தாலும், அவன் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றால், கேள்விகளுக்கு உடன்பாடான பதில்களை தயக்கமில்லாமல் கூறக்கூடியவராக இருக்க வேண்டும்.

1. உன்னுடைய பாவ மன்னிப்பிற்கும், நீ நீதிமானாக்கப்படுதலுக்கு அடிப்படையாகவும் இருக்கிறது என்று கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தில் நம்பிக்கை வைத்து, உன்னால் முடிந்தவரை திருந்தி உன் பாவங்களுக்காக வருந்துகிறாயா?

2. நீ பெற்றிருக்கிற திறமை, செல்வம், நேரம், செல்வாக்கு போன்ற அனைத்தையும் அவருடைய ஊழியத்திற்கு உண்மையுடன் மரண பரியந்தம் பயன்படுத்த உன்னை முழுமையாக கர்த்தருக்கு அர்ப்பணித்திருக்கிறாயா?

3. இந்த பாவ அறிக்கையின் அடிப்படையில் உன்னை விசுவாச வீட்டாரின் ஒரு அங்கத்தினனாக அங்கீகரித்து வலது கையின் அந்யோந்நியத்தை கொடுக்கிறோம். ஆனால் எந்த சபை பிரிவு அல்லது கட்சி அல்லது விசுவாச அறிக்கையின் பேரில் அல்ல. ஆனால் நமது மகிமையடைந்த கர்த்தராகிய இரட்சகரின் நாமத்தினாலும் மற்றும் அவரது சீஷர்களின் பேரிலும் ஆகும்.

**R5248**

## Earthly Loves Vs. Heavenly Love
## பூமிக்குரிய ஆசைகளும் பரலோக ஆசையும்

கடந்த சில வருடங்களுக்கு முன்னதாக நாகரீக உலகமானது உணர்ச்சி, சிற்றின்பம் மற்றும் குற்றம் இவைகளின் யுகத்தில் நுழைந்திருக்கிறது என்று பத்திரிக்கையாளர்கள் உணருகிறார்கள். நல்ல பத்திரிக்கையாளர்களான நிரூபர்கள் பிரசுரமாகும் செய்திகள் கோபம் மற்றும் சிற்றின்பத்தை கிளறுவதாக உணர்ந்து, இவைகளை குறைக்கும்படி முயற்சிக்கிறார்கள். விசேஷமாக அவர்களது நிர்வாக மேலாளர்களின் கருத்துப்படி ஜனங்களின் இழிவான ருசியை அறிந்து வெறுப்புட்டும் விபரங்களை உணர்ந்து, பொதுவாக பொதுமக்களின் நன்மையை கருதி அதை கட்டுப்படுத்துகிற அவர்களது ஞானம் மெச்சத்தக்கது.

உணர்ச்சி மற்றும் குற்றங்களின் இந்த அலையை கணக்கிட வெவ்வேறு வழிகள் இருக்கின்றன. நமது சத்துருக்கள் நம்மை சந்தேகத்திற்கிடமில்லாமல் குற்றம் சாட்டுவார்கள். அதாவது வேதகாம நரகம், நித்திய ஆக்கினையுள்ள இடமல்ல, ஆனால் கல்லறைதான் என்கிற நமது போதனை பயத்தை அவர்களை விட்டு நீக்கி மனித உணர்ச்சிகளுக்கு சுதந்தரம் கொடுக்கிறது என்பதாகும். நமது பதில் துன்மார்க்கர் நமது செய்தியை பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதே. "துன்மார்க்கரில் ஒருவனும் உணரான். ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள்." நாம் எதை விசுவாசிக்கிறோம், நம்புகிறோம் என்பதை கண்டுபிடிக்க துன்மார்க்கர் போதுமான அளவுக்கு ஆவல் உள்ளவர்களாக இருக்கவில்லை. அவர்களது நம்பிக்கைகள் தேவனுடைய வசனத்தின் மேல் கட்டப்படவில்லை. ஆனால் அவர்களது சபைப்பிரிவின் கவுரவ கனத்தில் உள்ளது.

மாறாக, வேதாகமத்திலும் தேவனிடத்திலும் பொதுவான நம்பிக்கையின்மை, எந்த வகையான நரகம் அல்லது பரலோகத்தில் உள்ள நம்பிக்கையின்மைக்கு இந்த குற்ற அலையே மிகவும் காரணமாக இருக்கிறது என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகளில் நமது மாபெரும் கல்லூரிகள் ஆயிரக்கணக்கனோரை தேவனை அறியவோ, ஆராயவோ முடியாது என்ற கொள்கைக்கு திருப்பிக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய ஒவ்வொரு பட்டதாரியும் இப்படிப்பட்ட கொள்கையுடையவராயிருக்கின்றனர். வேதாகமத்தின் மேல் நம்பிக்கையின்மை சமூகத்தின்

ஒவ்வொரு அடுக்கிலும், பிரசங்க மேடையிலும் சமூக வட்டாரங்களிலும் பரவியிருக்கிறது. காரணம் அவர்களது உயர்ந்த வாழ்க்கைத் தரம். தற்காலத்தின் குற்றங்கள் கல்லூரி பயிற்சி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களால் அடிக்கடி நிகழ்த்தப்படுகிறது என்பது கவனிக்கப்படுகிறது. இன்னும் மற்றவைகள் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதில் நம்பிக்கையின்மையினால் செய்யப்படுகிறது.

ஆனால் மேலே சொல்லப்பட்டவைகளோடு தற்காலத்தில் ஏதோ விநோதமானது இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். நமது நாட்கள் எல்லா திசைகளிலும் மனதளவிலான செயல்பாடுகள் உள்ளதாக இருக்கிறது. ஒரு நாள் எல்லா திசைகளிலும் மிதமிஞ்சி நிம்மதியற்றதாக இருக்கிறது. மிகவும் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள் சரீர பிரகாரமான ஆசையை தூண்டுகின்றன; காரசாரமான விருப்பங்களுக்கு வழி நடத்துகின்றன. கடந்த ஆறாயிரம் வருடங்களாக பெற்ற சீர்கேடு மற்றும் பலவீனத்தினால் நமது இனத்தின் பிரயாசை மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆனால் தத்துவ சாஸ்திரம் எதுவாக இருந்தாலும் உலகமானது மிகவும் நிம்மதியற்ற நிலையில் கோபம், வன்மம், பகை, சண்டைகள், பொறாமைகள், பெருமை போன்றவைகளை வெளிப்படுத்தும்படி எழும்பப் பெற்று தீவிரமான குழப்பத்தில் இருக்கிறது.

அர்ப்பணம் செய்த தேவனுடைய ஜனங்கள், அவர்கள் உலகத்தாராக இல்லாதிருந்தும், உலகத்திலிருக்கிறார்கள். அவர்கள் புது சித்தத்துடன் "கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்டு," புது சிருஷ்டியாக இருந்தும், அவர்கள் "இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறார்கள்." அவர்களது மண்பாண்டங்கள், உலகமானது பொதுவாக தாக்கப்படுகிறது போல, உணர்ச்சிகள் மற்றும் கொந்தளிப்புகளின் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறது. சத்துருவானவனும் விழுந்துபோன தூதர்களும் தவறான திசைகளில் மன உணர்ச்சிகளை உண்டாக்குவதற்கு காரணமாக இருக்கிறார்கள் என்று நாம் யூகிப்பது சரியாக இருக்குமென்றால், பிறகு இந்த சத்துருக்களான ஆவிகள் அர்ப்பணம் செய்த கர்த்தருடைய அடியார்களை கண்ணியிலும் வலையிலும் சிக்க வைக்க மிகவும் விழிப்பாக இருப்பார்கள் என்று நாம் நிச்சயமாக உணரலாம். பரிசுத்த பவுல் கூறுவது போல் "அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே." (2 கொரிந்தியர் 2:11) "மாம்சமும் இரத்தமும் வான மண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவிகளோடு" போராடுவதற்கு தகுதியுள்ளவைகள் அல்ல. (எபேசியர் 6:12) ஆகையால் மற்றவர்களைக் காட்டிலும் கர்த்தருடைய ஜனங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாக இருக்கிறது. நமது நாளில் அனுமதிக்கப்பட்டிருக்கிற தீமையான போக்குகளை எதிர்த்து நிற்க விசேஷமான எச்சரிக்கை அவசியமாக இருக்கிறது.

### "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்"

கிறிஸ்தவனின் பலத்தின் இரகசியம், தனது மாம்சீக சித்தத்தை விட்டுவிட்டு, அதற்கு பதிலாக கிறிஸ்துவின் சித்தத்தை எடுத்துக் கொள்வதில் அமைந்திருக்கிறது. அவனது ஆபத்து தனது புது சித்தத்தின் தீர்மானத்தை அவனது மாம்சம் மீறுகிற முயற்சியில் அமைந்திருக்கிறது. மாம்சமானது இரகசியமாக இது, அது மற்றும் மற்ற காரியங்களும் தவறில்லை, ஏனெனில் அவை இயற்கையானது என்று அறிவுறுத்துகிறது. அதன் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அது அறிவுறுத்துகிறது. புது சிருஷ்டியானது, மாம்சத்தை அதன் இச்சை ஆசைகளோடு கொல்லும் என்று அது சில சமயங்களில் அறிவுறுத்துகிறது. (கொலோசெயர் 3:5; கலாத்தியர் 5:24)

புது சிருஷ்டியானது ஒவ்வொரு காரியத்திலும் மாம்சத்தின் யோசனைகளின் மேல் நம்பிக்கை வைக்க முடியாது. மாம்சத்தின் ஆலோசனைகளுக்கு அது இடங்கொடுத்தால் வஞ்சகத்திலும் கண்ணியிலும் சிக்க வைக்கும் என்பதை அனுபவமானது போதிக்கிறது. ஆகவே புது சிருஷ்டியானது முழுவதுமாக கர்த்தரையும் அவரது யோசனைகளையும் தேவனுடைய வார்த்தையையும் நம்பியிருக்க வேண்டும். புது சிருஷ்டியின் விவேகமான தீர்மானம் தெய்வீக அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எந்த காரியத்திலும் தனது மாம்சீக தீர்மானத்தை, தனது சொந்த தீர்மானத்தை நம்புவதற்கு தைரியங்கொள்ளக்கூடாது. சக மனிதரின் தீர்மானத்தை கூட நம்புவதற்கு தைரியங்கொள்ளக் கூடாது. ஏனெனில் அவர் மனசாட்சி உடையவராக இருந்தாலும் சரியான புத்திமதி சொல்ல நோக்கங் கொண்டிருந்தாலும், அவர் ஏறக்குறைய மாம்சீக சிந்தைபடி தான் கூறுவார். புது சிருஷ்டி தனது சரியான மார்க்கத்தை தேவனுடைய வசனத்திலிருந்து கேட்க வேண்டும், அதை பின்பற்ற வேண்டும். அதன் கொடூரமான பலன் என்ன என்பதை அறியாமல் அதிலிருந்து விலக தைரியங்கொள்ளக் கூடாது.

மாம்சத்தை கட்டுப்படுத்துவதில், கிறிஸ்துவின் சிந்தையின் மதிப்பை உணர்வதில், ஆவிக்குரிய வளர்ச்சியில் கிறிஸ்தவன் முன்னேறும் போது, அவன் ஒரு வகையில் "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட்டிருக்கிறான்." பரிசுத்த ஆவியின் வல்லமையில் அவன் அதிக தயவுள்ளவனாகவும் அதிக சாந்தம் உள்ளவனாகவும் அதிக பொறுமை உள்ளவனாகவும், அதிக சகோதர அன்பு உள்ளவனாகவும் மற்றும் அதிக அன்புள்ளவனாகவும் ஆகின்றான். இப்படியாக அவன் பரிசுத்த ஆவியின் கனிகளிலும் கிருபையிலும் ஆண்டவரின் குணலட்சண சாயலிலும் வளருகிறான். ஆனாலும் அவனது ஆபத்துக்கள் முடிவடையவில்லை. ஏனெனில் அவனது சத்துருவும் மாம்சமும் அவன் தனது இருதயத்தை முதலில் கர்த்தரிடம் கொடுத்த போது பண்ணின தாக்குதலிலிருந்து முற்றிலுமாக வேறான வகையில் தாக்குதல் பண்ண தயாராயிருப்பதை அவன் காண்கிறான்.

இந்த பிந்தைய தாக்குதல்கள், ஆவிக்குரிய உச்சக்கட்ட நிலையை அடைதல் ஆகிய அன்பு பற்றிய திசையில் இருக்கிறது. புது சிருஷ்டியாக அவனது அன்பு பரிசுத்தமானதாகவும், புனிதமாகவும் ஆவிக்குரியதாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். மேலும் அவன் தனது சகோதரருக்கான அன்பு, அவன் பிதாவானவரையும் குமாரனையும் பரிசுத்த தூதர்களையும் அன்பு செலுத்தும் விதமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். அவன் இந்த அன்பை தற்கால நிலைமைக்கேற்ப சரிகட்ட செய்யும் முயற்சிகள், அவனது பரிசுத்த புனித நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் விருப்பங்களை மாம்சமானது தாக்குகிறது.

ஆவிக்குரிய காரியங்கள், பரிசுத்தம், சத்தியம் முதலானவைகளை அவனைப் போல சகோதர, சகோதரர்கள் சும்மா புகழாமல், ஆவிக்குரிய கனிகளில்

அவர்களது வளர்ச்சி மாம்சத்திலும் மனதிலும் சிந்தையிலும் அவர்களை அதிக வசீகரம் உள்ளவர்களாக்குகிறது.

ஆவிக்குரிய அன்பு, நம்பிக்கை, ஐக்கியம் ஆகியவை வளரும் போது, மாம்சீக பலவீனத்தின் மூலம் ஒரு புது ஆபத்து இருக்கிறது. ஆகையால் தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் தொடர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். மாம்சீக சிந்தையின் ஒவ்வொரு அத்துமீறுதலையும் அதன் விருப்பங்கள் ஆசைகளையும் கவனித்து ஜெபத்தில் வைக்க வேண்டும். புது சிருஷ்டி ஜீவிப்பதற்கு மாம்சீக ஆசைகள் எப்படியாவது அழிக்கப்பட வேண்டும், சிலுவையிலறையப்பட வேண்டும், கொல்லப்பட வேண்டும். ஒன்றின் வாழ்வு மற்றதின் மரணத்தில் இருக்கிறது. இந்த மாபெரும் சத்தியத்தை எவ்வளவு சீக்கிரம் புரிந்துகொள்கிறோமோ அது நமக்கு மிகவும் நல்லது.

**"மேலானவைகளையே நாடுங்கள்"**

இந்த பூமிக்குரிய ஆசைகள் எப்பொழுதுமே சிற்றின்ப ஆசைகளை நோக்கியிராதபடிக்கு புது சிருஷ்டியின் விருப்பங்களிலிருந்து எப்பொழுதும் வேறு திசைகளில் மாற்றும் நோக்கமுடையதாக இருக்கிறது. சகோதரர்களுக்கிடையேயும் சகோதரிகளுக்கிடையேயும் அந்நியோந்நியம் வளரும் போது ஏற்பட்ட ஆவிக்குரிய காரியங்களை நாம் அறிந்திருக்கிறோம். இந்த காயம் அவர்கள் ஆத்துமா விரும்புகிற பூமிக்குரிய சகோதரத்துவத்தின் திருப்தியில் அடங்கியிருக்கிறது. அது பரிசுத்தமானதாக இருக்கிறது. பூமிக்குரிய தளத்தில் அவரது ஜனங்கள் யாருடனும் மன திருப்தியில் இருப்பது தேவனுடைய நோக்கம் அல்ல. அவரிடத்திலும் அவரது வார்த்தையிலும் முழுமையான விசுவாசம், அவரிடத்தில் நமது தனிப்பட்ட பொறுப்பை உணரச் செய்யும்; நம்மை தனித்தனியாக அவரிடத்தில் இழுக்கச் செய்யும். இதன் மூலம் தோழமையை, சந்தோஷத்தை, சமாதானத்தை இருதய பூர்வமாக நாம் காண்போம்.

ஆகையால் பழைய சிருஷ்டியின் தோழமை, அது தூய்மையான நோக்கத்துடன் இருந்தாலும், அது புது சிருஷ்டிக்கும் கர்த்தருடனான ஆவிக்குரிய தோழமைக்கும் அவமானம் ஆகும். பூமிக்குரிய தளத்தில் நம்மை ஏதாவது ஒன்று முழுமையாக திருப்திப்படுத்துமானால் நாம் இன்னும் கர்த்தர் நமக்காக திட்டமிட்டிருக்கிறதும் அவரால் மட்டுமே திருப்தி அடையக்கூடியதுமான உயர்ந்த மனோபாவத்தையும் ஆசையையும் நாம் அடையவில்லை என்பதற்கு ரூபகாரமாகும்.

நம்முடைய வாழ்க்கையின் முடிவில் நாம் அனுமதிக்கிற மாம்சீக தோழமை, அது நல்ல நோக்கத்துடன் இருந்தாலும் அது இன்னொரு வகையில் அனுகூலமற்றதாக இருக்கிறது. அது கர்த்தரையும் அவரது தோழமையையும் சரியானபடி உணருகிறதில் தோல்வியை குறிக்கிறதோடல்லாமல் சபையாகிய கிறிஸ்துவின் முழு சரீரத்தின் தோழமையை சரியானபடி உணருகிறதிலும் தோல்வியை குறிக்கிறது.

கிறிஸ்துவின் ஆவியானது கர்த்தரிடத்தில் மட்டுமே நமது அனுதாபமும் அக்கரையும் மையப்படுத்தப்பட்டதாக இருக்க அனுமதிக்கிறதாக இருக்கிறது. சபையாகிய கிறிஸ்துவின் சரீரமாகிய மற்றவர்களிடத்தில் நமது அக்கறை அனைவரிடமும் இருக்க வேண்டும். பணக்காரர்களிடம் மாத்திரமல்ல, ஏழைகளிடமும், ஞானிகள் மற்றும் உயர்ந்தவர்களிடம் மாத்திரமல்ல, குறைவான ஞானமுள்ளவர்கள் மற்றும் அறியாமை உள்ளவர்களிடத்திலும் படித்தவர்களிடத்தில் மாத்திரமல்ல, படிக்காதவர்களிடத்திலும் நாம் அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நமது அக்கறை மாம்சத்தின் படியில்லாமல், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக அவர்களுக்குள் இருக்க வேண்டும். பூமிக்குரிய போதனைகளிலும் மாம்சீக பலவீனத்திலும் ஊனமுற்றவர்களாக இருப்பவர்கள் மட்டுமே நமது அனுதாபத்திற்கும் அன்புக்கும் தகுதியானவர்கள். ஏனெனில் அவர்கள் நல்ல போராட்டத்தை போராடவும் அவர்களது கறைகளை ஜெயங்கொள்ளவும் நாம் பாடுபட வேண்டும்.

ஆகையால் நாம் கர்த்தருடைய ஜனங்களாக நாம் மேலானவைகளையே அதிகமதிகமாக நாட வேண்டும், பூமிக்குரியவைகளையல்ல. அதன் மூலம் இப்படியாக தேவனுடைய நன்மையும் பிரியமுமான அவரது சித்தம் நம்மில் பரிபூரணமாக நிறைவேற தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்கலாம். அவரது சித்தம் நியாயமற்றதல்ல. அவர் நம்மை மண்ணென்று நினைவு கூருகிறார். தேவனிடத்தில் நமது அர்ப்பணம் மாம்சத்தின் படியில்லாமல் , ஆவியின்படி இருக்க வேண்டும் என்பது நமது சித்தமாக இருக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருக்கிறது. தனிப்பட்டவர்களோடு மாத்திரமல்ல சபையில் எளியவர்களோடு மாத்திரமல்ல, கிறிஸ்துவின் நாமத்தினால் நாமம் தரிக்கப்பட்ட அனைவரோடும், தங்கள் முகத்தை பரலோகத்தை நோக்கி வைத்துக்கொண்டு, சிலுவை வீரர்களாக சீயோன் மலையை நோக்கி செல்லுகிறவர்களோடும் மற்றும் முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையோடும் கூட இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**